



கல்முனை NET
kalmunainet.com
உண்மையின் முகம்
e-Paper
பர்மானம்
Parimanam
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 22 | சோபகிருது வருடம் வைகாசி 17 | 2023 மே 31 புதன்கிழமை | 20 பக்கங்கள் | விலை 70/-


# பாதுகாப்பு அமைச்சு கடும் எச்சரிக்கை

03

## மத பூசல்களை தூண்டினால் சட்டம் பாயும்



05

## கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு அவசியம்




## கிழக்கு உட்பட மூன்று மாகாணங்களுக்கு கடுமையான வெப்ப எச்சரிக்கை

03

20



## IPL கிண்ணத்தை த்ரிலாக வென்றது சென்னை சூப்பர் கிங்ஸ்



02

## சொல்வதைக் கேள்; மீறினால் செல்

# சொல்வதைக் கேள்; மீறினால் செல்

✍ க. குணராசா

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயகவை பாராளுமன்றம் பதவி நீக்கியதற்குப் பின்னால், நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் கரங்கள் இருந்தன என்பதை மறப்பதற்கு இல்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இணங்கிச் செயற் படாதவர்களுக்கு இதுதான் நிலை என்ற மறைமுக எச்சரிக்கையை இவரது பதவி பறிப்பு தெளிவாகக் காட்டி இருக்கிறது.

இப்பதவியிலிருந்து இவரை நீக்குவதற்கு ஆதரவாக 123 எம்பிக்களும், எதிராக 77 எம்பிக்களும் வாக்களித் துள்ளனர். சுதந்திர ஆணைக்குழுக்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியுமா? என்ற கவலையை ஏற்படுத் தியுள்ள இந்தப்பதவி விலக்கல் மறுபுறத்தில் நாட்டின் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவும் இது நோக்கப்படுகிறது. ஊழலை ஒழிப்பது, அரசியலில் குடும்ப ஆதிக்கத்தை அழிப்பது மற்றும் அரசின் அமுக்கக் குழுக்களை இல்லாதொழிப்பது உள்ளிட்ட நோக்கிற்காக ஆரம்பிக்கப்பட்ட 'அரகலயவின்' இலட்சியங்களுக்கு இந்தப் பதவி பறிப்பு புத்துயிரூட்டுவதற்கு வழி வகுத் திருக்கிறது என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

## ஜனகவின் பதவி பறிப்பு :

## நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றும் இணைந்த செயற்பாடு

ஜனக ரத்நாயக்க பதவி விலக்கப்பட்டதை சாதார ணமான மக்கள் ஏற்றுக் கொண்டதாக இல்லை. இந்த விடயத்தில் மிகப்பெரிய அநியாயம் நடக்கிறது என்று கூறியவர்களே ஏராளமாக இருக்கிறார்கள்.

225 எம்பிக்களும் இந்நாட்டுக்குத் தேவையில்லை என்ற கோஷத்திலும், ஆத்திரத்திலும்தான் 'அரகலய' ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. விலைபோகும் எம்பிக்கள் இருக்கும் வரை, இந்நாட்டுக்கு விமோசனம் இல்லை யென்ற கோஷங்கள்தான், காலிமுகத்திடலின் முகடு கள்வரை ஒலித்தன.

ஜனக ரத்நாயகவை பதவி நீக்கப் பாராளுமன்றம் எடுத்த முடிவும், இதற்கு ஆதரவாக வாக்களித்த எம்பிக்களையும் நோக்குகையில், அரகலயவின் சிந்தனைகள் ஆறுதலளிக் கவே செய்யும். ஆனாலும், அங்கு இளைஞர்கள் நடந்து கொண்டதை ஏற்க எவரும் தயாரில்லை. பொருளாதார நெருக்கடிகள் நீங்கும் சூழல் தென்படுகையில், இவ்வாறான ஒரு முடிவுக்கு பாராளுமன்றம் வந்திருப்பது ஆரோக்கியமான அரசியலாக தெரியவில்லை.

அரசியலை பக்கம் சாராமலும் பாரபட்சமின்றியும் முன் னெடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்ந்தும் பயனற்றே போகின்றன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் நிர்வாகத்தில்தான், இதற்கான சிந்தனைகள் துளிர்விடத் தொடங்கின. நீதித்துறை, நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறைகளின் சுயாதீன செயற்பாடுகளை உத்தரவாதப்படுத்த வேண்டுமானால், அரசியலுக்கு அப்பாலான சுயாதீன ஆணைக்குழுக்கள் அவசியம். சட்டத்தையும் மனிதன் உருவாக்கி, அதிலிருந்து தப்பும் உபாயங்களையும் மனிதனே உருவாக்குகிறான். இதனால்தான், இழுபறிகளுக்கு இன்னும் தீர்வுகள் கிடைக் காதுள்ளன.



இவற்றுக்கு முழுமையாக தீர்வைத் தேட முடியாது. இருப்பினும், ஜனநாயகம் இவ்விடயத்தில் உச்சளவில் முயற்சிக்கிறது. நவீன நூற்றாண்டில், அரசியலில் ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்து வதும் இந்த ஜனநாயகம்தான். ஆனால், ஜனநாயகத்தின் பேரில் நடக்கும் அநீதிகளுக்கு அளவில்லாமையும் இந்த நவீன யுகத்தில்தான்.

எதிர்க் கட்சியிலிருப்போருக்கு நடப்பதெல்லாம் ஜனநாயக விரோதம். ஆட்சியிலிருப்போர், இயற்றுவ தெல்லாம் சட்டமேதான் என்ற நிலையிலே, உலக ஒழுங்கு ஓடுகிறது. கிழக்காசிய நாடுகளில் இந்நிலைமை இதைவிடவும் மோசமாகி வருகிறது. அதிகாரத் திலிருப்போரை பழிவாங்குவதற்கென்றே ஆட்சிகள் கவிழ்க்கப்படுவதும் இந்நாடுகளில்தான். பாகிஸ்தானின் அண்மையச் சம்பவங்களை மனக்கண் முன் கொண்டு வருவோருக்குப் புரியும் இது. கவிழ்க்கப்பட்ட ஆட்சிக்குப் பாதுகாப்புக்கோரி, புதிய ஜனாதிபதியைத் தெரியும் நிலைக்கு இலங்கை வந்ததும், தப்பித்தல்களிலுள்ள ஒரு நவீன யுக்தியாகவே இன்று நோக்கப் படுகிறது. இந்த யுக்திக்குள்தான், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் தலைவரின் பதவிபறிப்பும் உள்ளது.

நாட்டின் நிர்வாகம் இடைஞ்ச லின்றி, பழிவாங்கலின்றி, பாரபட்ச மின்றி மற்றும் சட்டத்திலிருந்து தப்பிக்கும் தயவின்றிச் செல்ல, சுதந்திர ஆணைக்குழுக்கள் அவசியம். இலங்கையில் ஒன்பது ஆணைக்குழுக்கள் நிறுவப்பட் டுள்ளன. அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஆணைக்குழுக் கள், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு கடிவாளமிடும் நோக்கில்தான் நிறைவேற்றப்பட்டது.

ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றும் சக்தியுள்ள இந்த நிறைவேற்று அதிகாரத்துக்கு இந்த, ஆணைக்குழுக்களா ஆணையிடுவது? சட்டம் இயற்றப்பட்டு ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட் டாலும் மக்கள் பிரதிநிதிகளின் மனநிலைகள் இன்னும் இப்படித்தானுள்ளது. குறிப்பாக ஆளுந்தரப்பு எம்பிக் களும், ஆளும்கட்சிக்குத்தாவும் ஆசையுள்ள எம்பிக்களது மனநிலைகளும்தான் இவை.

நிர்வாகத்துறை, நீதித்துறை மற்றும் சட்டத்துறைகளை எவ்வித அழுத்தங்களின்றியும் இந்த ஆணைக்குழுக்கள் கட்டுப்படுத்த சுதந்திரமளிக்கப்பட்டால், மக்களுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆனால், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரைப் பாராளுமன்றம் பதவி நீக்கியதால், மக்கள் சிந்திக்கத் தூண்டப்பட்டுள்ளனர்.

காலிமுகத் திடல் ஆர்ப்பாட்டங்களின் பின்னர், புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்த புறப்பட்டவர் கள், அதேபோன்ற 'அரகலய' அட்டகாசங்களை சட்டத் தில் புகுத்திவிட்டனர்.

மின்சாரக் கட்டணத்தை அரசின் தேவைக்கு ஏற்ப அதிகரிக்க முடியாது என்ற நியாயத்தில் செயற்பட்டவர் ஜனக ரத்நாயக்க. இவர் முறைகேடான நிதி நிர்வாகத்தால் ஏற்பட்ட தேசிய நெருக்கடியை மக்கள் தலையில் சுமத்த முடியாது என்று ஜனக ரத்நாயக்க சிந்தித்தார். இதனால், அவர் இன்று சந்தியில் நிற்கிறார்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

பரிமாணம் Parimanam கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

# சண்டாளர்களின் சூழ்ச்சி

மக்களால் நிராகரிக்கப்பட்ட சக்திகள் சில, மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான பிரயத்தனங்களில் ஈடுபட் டுள்ளதை அண்மைக் காலமாக அவதானிக்க முடிந்துள் ளது. கடந்த காலங்களில் கட்டவிழ்க்கப்பட்ட அதே சாயலிலே, இச்செயற்பாடுகளும் உள்ளன. இதனால் இச்சக்திகளை அடையாளம் காண முடியாவிடினும், ஓரளவு அனுமானிக்க முடிந்துள்ளது.

தேசப்பற்றுக்குள் மதப்பற்றை புகுத்திய யுக்திகள்தான், 2019 வெற்றிக்கு வழி வகுத்திருந்தன.

2009 இறுதி யுத்த வெற்றியிலிருந்து படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்ட இந்த வியூகம் இன்று, ஆட்சி யதிகாரத்தை தீர்மானிக்கும் அளவுக்கு, அளவுகோ லாகியுள்ளது.

இச்சக்திகளால் தூக்கிப்பிடிக்கப்பட்ட தேசப்பற்றும், இந்தப்பற்றுக்கு இச்சக்திகள் கூறிய வரைவிலக்கணமும் நாட்டின் ஏனைய சமூகங்களை, நாட்டுப்பற்றிலிருந்து தூரமாக்கியதை மறுப்பதற்கில்லை.

இருந்தாலும், அரவணைந்து செல்லும் அரசியலுக்கு சிறுபான்மையினர் தயாராகவே உள்ளனர். அரவணைக் கத்தான்,பெரும்பான்மைவாதம் தயாராக இல்லை. அவ்வாறு தயாரானாலும் தென்னிலங்கையைக் குழப்பி, சமூகங்களை மோதவிட தீய சக்திகள் தயாராகவே உள்ளன. இதைத்தான், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எச்சரித்துள்ளார். நல்லாட்சியில் பிரதமராக இருந்த இவருக்கு, இந்த சக்திகளின் செயற்பாடுகள் பற்றி தெரியாதிருக்க முடியாது.

பௌத்தத்துக்கு ஆபத்தெனக் காட்டுவது, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு கேடு எனக் கூக்குரலிடுவது, இன்னும் வெளிநாடுகளின் தலையீடுகள், ஆள்புல எல்லையைக் குறிபார்ப்பதாக அபயக்குரல் எழுப்புவது இவைகள்தான், ஆட்சிபீடமேறுவதற்கான ஆசீர்வாதங் களாகியுள்ளன. மதத்தை நிந்தித்து, உணர்வுகளைக் கூர்மையாக்குவதனூடாக முன்னெடுக்கப்படும் உணர்ச்சி அரசியல், இம்முறையும் கை கூடும் என்ற கனவில் வாழ்வோரே இத்தகைய செயற்பாடுகளை ஏவிவிடுகின்றனர்.

இதன் ஆபத்துக்களை உணர்ந்த ஜனாதிபதி, இழி செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்தல், விசாரித்தல், பின்புலங்களை அறிதல் மற்றும் தண்டனை வழங்கல் என்பவற்றுக்காக சிறப்பு புலனாய்வு மற்றும் பொலிஸ் பிரிவை உருவாக்குமாறு பணித்திருக்கிறார்.

கடந்த முறைபோலல்லாது, மிக நூதனமாக இந்தக் காட்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. போதகர் ஜெராம் பெர்னாண்டோ, முகநூல் நகைச்சுவையாளர் நதீஷா ஆகியோரின் செயற்பாடுகள் பௌத்த மதத்தை கேலி செய்வதாயிருக்கிறது. அதேவேளை, ராஜாங்கனை சத்தாரத்தன தேரரின் உரையோ வேறு வகையில் இருக்கிறது. இவை, ஏன்? அரசியலமைப்பில் பாதுகாக் கப்பட்டுள்ள பௌத்த மதத்துக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லையென்பதைக் காட்டும் வியூகங்களா? மாதுலுவாவே சோபித தேரரின் 81 ஆவது ஜனன தின நிகழ்விலும், இச்செயற்பாடுகளுக்குப் பின்னாலுள்ள சக்திகளை அடையாளம் காணுமாறு வலியுறுத்தப்பட் டிருந்தது.

ஆட்சிக்கு வருவதற்கான கருவியாக பௌத்த தர்மம் பயன்படுத்தப்படக் கூடாதென இங்கு உரையாற்றியோர் தெரிவித்தது ஏன்? இந்தக் கருவி இன்னும் உயிருடன் உள்ளதென்கின்ற அர்த்தத்தினாலேதான்.

பெரும்பான்மைச் சமூகம் பின்பற்றும் ஒரு மத நம்பிக்கை, கேலிக்குள்ளாவதை தடுக்கத் திராணியற்ற அரசாங்கம் என்ற 'இமேஜை' உருவாக்கவே இந்த முயற்சிகள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# பாதுகாப்பு அமைச்சு கடும் எச்சரிக்கை

## மத பூசல்களை தூண்டினால் சட்டம் பாயும்

இனவாதப் பிரச்சினைகளைத் தூண்டுவதற்கு அல்லது ஒத்த நோக்கங்களுடன் செயல்பட முயற்சிக்கும் நபர்கள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தத் தயங்கமாட்டோம் என்று பாதுகாப்பு அமைச்சகம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன், நாட்டில் மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்படுவதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுவதாக தெரிவித்தார்.

குறிப்பாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீள்வதற்கான பாதையில் செல்லும் முக்கியமான தருணத்தில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் மதப் பூசல்களைத் தூண்டிவிட்டு நிலவும் அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்கும் நோக்கத்தில் உள்ள பல்வேறு வேறுபாடுகள் குறித்தும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கவலை தெரிவித்தார்.

ஆரோக்கியமான சமூகத்திற்கு மத ஸ்திரத்தன்மையை பேணுவதன் முக்கியத்துவத்தை இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் மேலும் வலியுறுத்தினார்.

'ஒரு நபர் அல்லது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டுவதற்கு அல்லது அதே நோக்கத்துடன் வேலை செய்ய முயற்சித்தால், அரசியலமைப்பு மற்றும் தண்டனைச் சட்டத்தின் 9வது அத்தியாயத்தின்படி, சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நாங்கள் தயங்க மாட்டோம்' என்று அவர் மேலும் கூறினார்.

# மட்டக்களப்பில் மக்களைச் சந்திக்கிறார் கிழக்கு ஆளுநர்

கிழக்கு மாகாண புதிய ஆளுனர் செந்தில் தொண்டமான் மட்டக்களப்பு மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடும் மக்கள் சந்திப்பு எதிர்வரும் ஜூன் 1ம் திகதி நாளை மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

இம்மாவட்ட மக்களின் பிரச்சினைகள், தேவைகளை கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் மக்கள் சந்திப்பு மாவட்ட செயலகத்தில் பி.ப. 2.00 மணிதொடக்கம் 4.00 மணிவரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கிழக்கு மாகாண ஆளுனரின் பதவி அணியினர் அரச உயர் அதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இதனூடாக பொதுமக்கள் தமது பிரச்சினைகளை ஆளுனரிடம் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது

# மூன்று மாகாணங்களுக்கு கடுமையான வெப்ப எச்சரிக்கை

இலங்கையின் மூன்று மாகாணங்களில் கடுமையான வெப்பம் நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் வெப்பச் சுட்டெண், மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை, 'எச்சரிக்கை' நிலை வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீடித்த வெளிப்பாடு மற்றும் செயல்பாட்டின் மூலம் சோர்வு சாத்தியமாகும் என்று கூறிய வானிலை திணைக்களம், தொடர்ச்சியான செயல்பாடு வெப்ப பிடிப்புகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தது

# லிட்ரோ சமையல் எரிவாயு வினியோகம் அதிகரிப்பு

எரிவாயுவிற்கான நாளாந்த கேள்வி அதிகரித்துள்ளமையால், தினசரி எரிவாயு விநியோகம் 10 ஆயிரம் சிலிண்டர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, தினசரி எரிவாயு விநியோகம் 30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க சப்புகஸ்கந்த மாபிம பிரதேசத்தில் புதிய எரிவாயு முனையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

# பொது நினைவு தூபி: இனப்பிரச்சினைகளை மூடி மறைப்பதாகவே அமையும்

**- சிவாஜிலிங்கம்**



பொது நினைவு தூபி என்பது மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்தும் எனவும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த மாட்டாது எனவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள தமிழ் மக்களிற்கு பொது நினைவு தூபி அமைத்தல் தொடர்பாக அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக உங்கள் கருத்து யாது? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு,

அவர் பதிலளிக்கையில்,

பொது நினைவு தூபி என்பது மாறுபட்ட பிரச்சினைகளை உடையவர்களிற்கு தீர்வாக செய்வது முரண்பாடுகளை வலுப்படுத்துமே தவிர அது நிச்சயமாக நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கோ அல்லது வேறு ஒரு விடயத்திற்கோ உதவமாட்டாது.

மேலும், நினைவு தூபியில் பெரும்பாலான சிங்களவர்களும், படை வீரர்களுமே அஞ்சலி செலுத்த முடியும்.

மாறாக போரிலே பாதிக்கப்பட்ட எமது மக்களிற்காக அஞ்சலி செலுத்த முற்படின் முள்ளிவாய்க்கால் விடயங்களையே நினைவுபடுத்தும்.

இவ்வாறாக பொது நினைவு தூபி என்பது இன பிரச்சினையை மூடி மறைப்பதற்காக அமைக்கப்படும் ஒன்றாகவே இதனைபார்க்க முடியும்.

மாறாக தமிழ் மக்கள் வேறு எந்த வழியிலும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் ஒதுக்கீடுகள் அதிகரிப்பு

எரிபொருளுக்கான கோட்டா நேற்று (30) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, மோட்டார் சைக்கிள்களுக்கான தற்போதைய 7 லீட்டர் எரிபொருள் ஒதுக்கீட்டை 14 லீட்டராக அதிகரிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்கான 15 லீட்டர் எரிபொருள் ஒதுக்கீட்டை 22 லீட்டராகவும், சாதாரண முச்சக்கரவண்டிக்கு 08 லீட்டராக இருந்த எரிபொருள் ஒதுக்கீட்டை 14 லீட்டராக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

30 லீட்டராக இருந்த காருக்கான எரிபொருள் ஒதுக்கீடு 40 லீட்டராகவும், வான் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் ஒதுக்கீடு 30 லீட்டரில் இருந்து 40 லீட்டராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும், பேருந்துகளுக்கு 60 லீட்டராக இருந்த எரிபொருள் ஒதுக்கீடும் இன்று நள்ளிரவு முதல் 125 லீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

75 லீட்டராக இருந்த லொறிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 125 லீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## சண்டாளர்களின்...

(ஆசிரியர்த் தலைப்பு...)

இதனால், இத்தூண்டுதலுக்குப் பின்னாலுள்ளோரை கண்டு கொள்வதுதான் பொருத்தமானது. ஜனாதிபதியின் அறிவிப்பிலும் இந்த அர்த்தம் இழையோடியிருந்தது.

சர்வதேச உதவிகளில் மீண்டெழ முனையும் இலங்கை போன்ற நாடுகள், கட்டாயம் சர்வதேசத்தை அரவணைத்துச் செல்வதே சிறந்தது. நிலைமை இவ்வாறு இருக்கையில், மதவாதத்தை தூண்டி, சிறுபான்மை சமூகங்களை ஒதுக்கும் பாரபட்சத்தை சர்வதேசம் ஏற்கப்போவதில்லை. உலக ஒழுங்கியலில் பின்பற்றப்படும் இந்த யதார்த்தத்தை அரசியல் தரப்புக்கள் உணரந்து நடப்பதுதான், எல்லாவற்றுக்கும் மேலான தேசப்பற்றாக இருக்க முடியும்.

ஒன்று மட்டும் தெளிவாக தெரிகிறது. ஜனாதிபதி, இந்த விடயத்தில் விழிப்படைந்திருக்கிறார். பொலிஸாருக்கு அவர் வழங்கி இருக்கின்ற கண்டிப்பான அறிவுறுத்தல்,

மக்கள் மத்தியில் பெரு வெளிச்சத்தை காட்டி நிற்கிறது.

# அரசின் பொது நினைவுத் தூபி திட்டம்

# தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு என்ன?

✍ குணா

அரசாங்கம் முன்மொழிந்துள்ள அனைத்து நபர்களையும் நினைவு கூருவதற்கான பொது நினைவுத்தூபி அமைக்கும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் செயற்பாடு என்பதோடு போரை மேற்கொண்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் ஒரே இடத்தில் நினைவு கூர முனைவதானது முரண்நகையாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் நினைவு கூறுவதற்கான நினைவகத்தை நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பின் அடையாளமாக கொழும்பு நகரில் பொருத்தமாõ இடமொன்றில் நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்நிலையில் கருத்து வெளியிடும்போதே தமிழ்த் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பிரச்சினைகளைத் தீர்த்திருப்பார்களாயின் இவ்விதமான மரணங்கள் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஆகவே மோசமான முறையில் நடத்தப்பட்ட போரினால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பில் தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டியது கட்டாயமானதாகின்றது.

அனைத்து மரணங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. படையில் உள்ள இராணுவ வீரர் போரில் மரணிப்பதற்கும், தாய் ஒருவர் படையினரிடத்தில் தனது மகனை ஒப்படைத்து விட்டதன் பின்னர் மரணிப்பதும், வலிந்து காணாமலாக்கப்படுவதும் முற்றிலும் மாறுபட்ட விடயங்களாகும்.

போரின் இறுதியில் படையினரின் அறிவிப்புக்கு அமைவாக இளைஞர் யுவதிகள் சரணடைந்துள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

அதேநேரம் இந்த விடயத்தில் மரணங்கள் பொது வானது என்று கூறினாலும், தமிழ் மக்கள் முகங்கொடுத்துள்ள மரணங்களும், இழப்புக்களும் அதிகமானவை. அவர்கள் மிகவும் அனுதாப நிலைமையில் உள்ளார்கள்.

ஆகவே, அவ்விதமான பாரிய இழப்புக்களைச் சந்தித்த மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி நினைவேந்தலைச் செய்வதற்குரிய சுதந்திரம் காணப்பட வேண்டும். அதனை கட்டுப்படுத்த முடியாது.

நினைவேந்தலைச் செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமை உள்ளது. அது மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தாம் விரும்புகின்ற பகுதியில் ஒன்று கூடி நினைவேந்தலைச் செய்வதற்கு முழுமையான உரித்துடையவர்கள்.

ஆகவே அதனைத் தடுத்து நிறுத்தி பொதுத்தூபி அமைப்பதானது சட்டத்தின் பிரகாரம் தவறானது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் பாதிப்படையச்செய்யும் செயற்பாடாகவே கருது கின்றோம்.

அந்த வகையில் பொதுத்தூபி அமைக்கப்படுவதையும், அங்கு தான் தமிழ் மக்கள் நினைவேந்தலைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த முனைவதையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றார்

ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது மக்க ளுக்கான நினைவுத்தூபி கொழும்பில் அமைய முடியாது. அதுவொரு பொதுத்தூபியாக இருக்க முடியாது.

அதற்கு நாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை. எமது மக்களுக்கான நினைவேந்தல் தூபியானது முள்ளிவாய்க்காலில் தான் நிறுவப்பட வேண்டும் என்றார்.

புளொட் அமைப்பின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவிக்கையில்,

படையினரையும், அவர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களையும் ஒரே இடத்தில் நினைவு கூருவதற்கு முயல்வதானது கேலிக்கூத்தான செயற்படாகும்.

இந்த முயற்சியானது, உள்நோக்கம் கொண்டது என்பதோடு பாதிக்கப்பட்ட மக்களை மேலும் நோகச் செய்யும் செயற்பாடாகும்.

இந்த செயற்பாட்டால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதுவதானது வேடிக்கையானது.

குறித்த செயற்பாடானது இனங்களுக்கு இடையிலான துருவப்படுத்தலை மேலும் வலுப்படுத்தி முறுகலையே தோற்றுவிக்கச் செய்யும் முயற்சியாகும்.

ஆகவே இவ்விதமான ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்றார்.

ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்க லநாதன் தெரிவிக்கையில்,

அரசாங்கம் பொதுநினைவுத்தூபியை அமைப்பதன் ஊடாக பொதுமக்கள் தமது உறவுகளுக்காக தத்தமது பிரதேசங்களில் நினைவு கூரல் செயற்பாடுகளை முன்னெடுப்பதை தடுத்து நிறுத்துவதை பின்னணியில் கொண்ட கபடத்தனமான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட எமது மக்கள் கொழும்பு வரை பயணித்து தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதும், தமது இழப்புக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய படையினருக்கும் அதே இடத்திலேயே நினைவு கூரலைச் செய்ய வேண்டும் என்பதும் வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சும் செயற்பாடாகும்.இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

அடக்குமுறைக்கு உள்ளாகிய இனமொன்று அடக்குமுறையிலிருந்து விடுதலையை அடைவதற்காக போராடியது. அந்தப்போராட்டத்தில் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

ஆவ்விதமான தமிழினம், எவ்வாறு அடக்குமுறையை மிகமோசமான உரிமை மீறல்களைச் செய்வர்களுடன் இணைந்து தமது உறவுகளை நினைவு கூர முடியும்.

அதுமட்டமல்ல, தமிழினம் என்ன காரணங்களுக்காக விடுதலை கோரி போராடியதோ அந்தக் காரணங்கள் இன்னமும் முடிவுக்கு கொண்டுவரவில்லை.

அவை நாளுக்கு நாள் தீவிரமடைகின்றன. அவ்விதமானதொரு சூழலில் பொதுநினைவுத்தூபி நினைவுகூரல் என்பது சூட்சுமங்கள் நிறைந்ததொரு நகர்வாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன், படையினர் தமக்கான நினைவுத்தூபிகளை அமைத்து அங்கு நினைவு கூரல்களைச் செய்கின்றார்கள். வெற்றி விழாக்களை நடத்துகின்றார்கள். அவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். அந்த தரப்புடன் எவ்வாறு தமிழ் மக்கள் ஒன்றிணைய முடியும் என்றார்.

---

2 ஆம் பக்க தொடர்ச்சி...

## சொல்வதைக் கேள்..

அரை வயிறும், குறை உயிருமாய் வாடும் மக்களின் தலைகளில் சுமையைச் சுமத்தக்கூடாது. இதுதான் ஜனகரத்நாயக்கவின் நியாயமும் வாதமும். ஏற்கனவே இருளில் வாடும் ஏழைகளின் வாழ்வை, மின்சார விலையைக் கூட்டி இன்னும் சீரழிக்கும் இதயம் அவரிடம் இருக்கவில்லை.

சட்டம் இயற்றுவது பாராளுமன்றம், எனவே, பாராளுமன்றத்தின் உத்தரவில் ஆணைக்குழுக்கள் செயற்படுவதுதான் சிறந்தது என்கின்றனர் சிலர். அதி காரங்கள் மற்றும் அழுத்தங்களுக்கு கட்டுப்படாமல் செயற்படுவதற்காக, பாராளுமன்றமே சட்டம் இயற்றி அறிமுகப்படுத்தப்பட்ட ஆணைக்குழுக்கள் இன்னு மொரு தடவை சட்டத்துறைக்கு கட்டுப்படுவதனால், ஆணைக்குழுக்கள் எதற்கு? இப்படிக் கேட்கின்றனர் பலர். இந்த சட்டத்துறை இவ்வாறு, நீதித்துறையிலும், நிர்வாகத்துறையிலும் தலையிட்டால் நிலைமைகள் என்ன?சட்ட வல்லுநர்கள் எழுப்பும் கேள்வி இது.

சட்டத்துறை இப்படித்தலையிட் டதால் , பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவும் இப்படித்தான், சந்தியில் நிற்க வைக்கப்பட்டார். ஆனால், பின்னர் ஆட்சிக்கு வந்தோர், அவரை மீண்டும் பதவியில மர்த்தி கௌரவித்த பின்னரே வீடு செல்ல அனுமதிக் கப்பட்டார்.

காலம் சுழன்றால், ஜனக ரத்நாயக்கவையும் இந்த கௌரவம் தேடி வரலாம். இவைகளல்ல பிரச்சி னைகள். இந்த இழுபறிகளை எப்படித் தீர்ப்பது. நிதிக் கொள்கைகள், வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் சட்ட அமுலாக்கல் துறைகள் என்பனவாவது நிறைவேற்றதிகாரத்தின் ஆணைக்கு அப்பால் செயற்படும் வகையில், ஆணைக்குழுக்களை அல்லது ஏதாவது பொது நிறுவனங்களை நிறுவுவது பற்றிய யோசனைகள் அடுத்த அரசாங்கத்தில் முளைக் குமளவுதான், இன்றைய ஆணைக் குழுக்களின் கையறு நிலைகள் உள்ளன.

மாற்றங்கள் வரவேண்டும் என்பதுதான் மக்களின் நிலைப்பாடு. *System change* - இந்த மாற்றங்கள் அடி க்கட்டுமானத்தில் இருந்து உருவாக வேண்டும். சிறாணி பண்டாரநாயக்கவுக்கு நடந்தது தான் ஜனகவுக்கும் நடந்திருக்கிறது.

'சொல்வதைக் கேட்கவில்லை என்றால் தூக்கு வோம்' என்ற மறைமுகத் தொனியில்தான், நிறை வேற்று அதிகாரத்தினதும் ஆளும் கட்சியினதும் செயல்பாடுகள் இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் அதனைத்தான் செய்தது.



# கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு அவசியம்

## இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன்

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) வழங்கிய பேட்டி



வ. சக்திவேல்

**கேள்வி: இணைந்த வடக்கு, கிழக்கில் சுயாட்சியென்பது வடக்கு அரசியல் தலைவர்கள் முன்வைக்கும் தீர்வாக இருக்கின்றது. கிழக்கு மக்களின் விருப்பம் எவ்வாறாக அமையும் என கருதுகின்றீர்கள்?**

**பதில்:** அரசியல் வரலாற்றில் வாரிசு அரசியல் தாங்கள் நினைப்பதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் போன்ற முடிவுகள் அனைத்தும் யாழ் மண்ணிலிருக்கின்ற சில தலைவர்களால் எடுக்கப்பட்ட முடிவுகள்தான். தமிழ் காங்கிரஸ், தனித் தமிழ் பிரகடனம், ஏனைய இயக்கங்கள், போன்றனவெல்லாம் யாழ்பாண கருத்தியலை உருவாக்க நினைக்கின்ற திமிர் பிடித்த அதிகார வர்க்கத்தினுடையதாக இருந்திருக்கின்றது. அவை சாமானிய மக்களுக்கு வெற்றிகரமான திட்டங்களைப் பெற்றுக் கொடுக்கவில்லை. முரண்பாடுகளையும் வலிகளையும்தான் ஏற்படுத்தியிருந்தன. விசேடமாக 1976 இற்குப் பின்னர், சகோதரப் படுகொலையாக எமது இனத்தையே அழித்துச்சென்றிருக்கின்றது. அதன் கடைசி அழிவுதான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட அழிவாகும். அதன் பின்னர்தான் எமது த.ம.வி.பு கட்சி கிழக்கிற்காக உருவானது.

எமது கருத்தியல் கொள்கை என்னவென்றால் கிழக்கு கிழக்காக இருக்க வேண்டும். கிழக்கின் தலைவிதியை நாங்களே தீர்மானித்துக் கொள்வோம். வடக்கிலே இருந்து யாரும் இங்கு வந்து ஆதிக்கம் செலுத்த முடியாது. உங்களுக்கிருக்கின்ற பிரச்சனைகளை நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். முடிந்தால் கிழக்கு மாகாணத்திற்கு பங்களிப்புக்களைச் செய்யுங்கள். வடக்கின் அரசியலை கிழக்கில் கொண்டு வந்து திணிக்க வேண்டாம். கிழக்கில் மூன்று இன மக்களும், இணைந்து வாழுகின்ற மாகாணமாகும். எனவே கல்வி, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால், தனியான அதிகாரப் பகிர்வின் தேவையையும் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம்.

**கேள்வி: உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைக்க வேண்டுமாக இருந்தால் இரண்டு வட்டாரங்களை ஒன்றாக இணைக்க வேண்டும். இதனால் முரண்பாடுகள் அதிகரிக்கும். பல சமூகங்கள் நிறைந்து வாழும் இடங்கள், ஏற்கனவே எல்லைகளில் பிரச்சனையிருக்கும் இடங்கள் இரட்டைத் தொகுதிகள் போன்றவற்றிலெல்லாம் கணிசமான பிரச்சனைகள் வந்திருக்கின்றன. எனினும் ஏதேனும் காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் விடுவதைத் தவிர்த்து அத்தேர்தல நடத்த வேண்டும் என்பதுதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிலைப்பாடு.

### மேய்ச்சல் தரை விடயத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளோம்

**கேள்வி: மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கூறுங்கள்....?**

**பதில் :** மாவட்டம் மாத்திரமல்லாமல் நாடு முழுவதிலும் அபிவிருத்தி என்பது தடைப்பட்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம், தற்போது நாட்டில் மெல்ல மெல்ல பொருட்களின் விலையிறக்கம், பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி அதிகரிப்பு, என ஒரு சுமுகமான சூழலை எட்டியிருக்கின்றது. இந்நிலையில் நாங்களும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றோம்.

அதனை மேலும் விருத்தி செய்வது தொடர்பிலும் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எனினும் மக்கள் விரைவான உட்கட்டுமான எதிர்பார்க்கின்றார்கள், அபிவிருத்திகளை மெல்ல மெல்ல அடுத்த வருடத்தில்தான் நாம் துரிதமான அபிவிருத்தியை எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் தேசியக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், கூட்டத்தில் எவ்வாறு கலந்து கொள்வதில் ஜனநாயகப் பண்புகளோடு நடந்து கொள்ள வேண்டும். அவர் ஜனநாயகம் என்ற போர்வையில் அநாகரீகமாக வார்த்தையால் வன்முறைகளைச் செய்ய முனைகின்றார். அவரின் விடயங்களை மாத்திரம்தான் முன்வைக்க வேண்டும் என உரத்த குரல் எழுப்பி சங்கடத்தை ஏற்படுத்துகின்றார்.

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைத் தவிர்த்து அவரது நிகழ்ச்சியை முன்னுரிமைப் படுத்துவற்கு முனைகின்றார். இது ஒரு சங்கடமான நிலமையாகும். இது மட்டக்களப்பில் மாத்திரம் இந்த நிலைமை உள்ளதே, என நான் தனிப்பட்ட முறையில் கவலையடைகின்றேன்.

### சாணக்கியன் எம்பி ஜனநாயகப் பண்புகளோடு நடந்து கொள்ள வேண்டும்

மண்டூர் - குருமண்வெளி, குருக்கள் மடம் - அம்பிளாந்துறை ஆகிய படகுச் சேவையில் நிதி அறவீடு செய்வது தொடர்பாக படகுகளின் திருத்த வேலைகள் என்பன அதிகரித்துள்ளன. இதற்காக மாகாணங்களுக்கு நிதியை பங்கீடு செய்கின்ற நிதிச் சேவை ஆணைக்குழு கிழக்கு மாகாண ஆளுனருக்கு வழங்கிய ஆலோசனையின் பெயரில் குறித்த படகுப் போக்குவரத்தை தொடர்ந்து இலவசமாக இல்லாமல் குறிப்பிட்ட அளவு நிதி அறவீடு செய்யுமாறு குறிப்பிட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளுனருக்கு உள்ளது. அதனை ஆளுனர் நடைமுறைப்படுத்த முனையும்போது நாம் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என திருப்பியனுப்ப முடியாது. அதனையும் ஒழுங்கு படுத்தப்பட்ட வரையறைக்குள்தான் நாம் அதனை மேற்கொள்ள முடியும். மாறாக இது தொடர்பில் எழுத்து மூலமாக மறு பரிசீலனை செய்யுமாறு நாம் கேட்க முடியும். இதனை பா.உ சாணக்கியன் உடனடியாக நிறுத்துமாறு அரசியலாக பார்க்கிறார். அடிப்படையில் சில விடயங்களை அணுகுவதில் சில தடுமாற்றங்களில் அவர் உள்ளார்.

**கேள்வி: கடந்த தேர்தலில் மக்கள் சக்தியொன்று உங்கள் பின்னே நின்றது. பொருளாதாரச் சூழல், அரசியல் தழம்பல் நிலை போன்றவற்றால் தற்போதைய நிலையில் உங்களுக்கான ஆதரவுத் தளம் பற்றிய நிலை என்னவாக உள்ளது?**

**பதில்:** மக்களிடமிருந்த எழுச்சி, நல்லாட்சிக்கான பலவீனம், சகோதர அரசியல்வாதிகளின் அட்டூழியங்களின் காரணமாக மக்கள் மத்தியிலிருந்த ஆத்திரம், கிழக்கு

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

# தொடர் கதையாகும்



# முஸ்லிம் அரசியலின் இயலாமை

✍ நிப்ராஸ்

ராஜபக்ஷக்களைப் புறந்தள்ளி எடுக்கப்படும் தீர்வுகள் எந்தக் காலத்திலும் நிலையான தீர்வாக இருக்காதென வெளிநாட்டமைச்சர் அலிசப்ரி தெரிவித்தமை பற்றி முஸ்லிம் தனித்துவ தலைமைகள் மௌனித்திருப்பது பல வகையில் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

தொடர் கதையாகி வரும் முஸ்லிம் அரசியலின் இயலாமைக்கு மற்றொரு ஆதாராமாகியுள்ளது கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம். முஸ்லிம் தனித்துவ அரசியலுக்கான அடையாள அம்சங்கள் நிறைந்த பூமியிது. சிறிதளவாயினும் ஏக பிரதிநிதித்துவ அங்கீகாரங்களைப் பெறும் மாவட்டங்களும் கிழக்கு மாகாணத்திலே உள்ளன. அதிலும் அம்பாறை மாவட்டம் தான், கொழும்புக்கு அடுத்து அதிக முஸ்லிம்கள் வாழும் பகுதி. கொழும்பில் பெற முடியாதுள்ள தனித்துவ அரசியலையும் இம்மாவட்டத்திலேயே வெல்லக் கிடைக்கிறது. மட்டுமல்ல, நாட்டிலுள்ள மொத்த இருபது இலட்சம் முஸ்லிம்களில், மூன்றிலிரண்டு பகுதியினர் தென்னிலங்கைக்கு வெளியில் வாழ்ந்தாலும், தனித்துவ அரசியல் கிழக்கிலே சாத்தியமாகிறது. முஸ்லிம் அரசியலின் அடையாள பூமியாக கிழக்கு நோக்கப்படுவதற்கு இதுவே பிரதானம்.

**முஸ்லிம் தனித்துவ அரசியலுக்கு கிழக்கு ஓர் அடையாளம்**

ஆனாலும், அண்மைக் காலமாக முஸ்லிம் அரசியலில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இந்த இயலாமைகள் தொடர்வதற்கான காரணங்களைக் கண்டறியுமளவுக்கு கிழக்கின் களம் கனத்து விரிகிறது.

இம்மாகாண சபையின் ஆட்சி, அதிகாரங்களைத் தக்க வைப்பதில், முஸ்லிம் தலைமைகள் செலுத்திய முயற்சிகள் சாத்தியமற்றதிலிருந்து, இவ்வியலாமைகள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கின. 2008 ஆம் ஆண்டு நடந்த மாகாண சபைத் தேர்தலில், கிழக்கின் நிர்வாகம் முஸ்லிம்கள் வசம் வரவில்லை. 2012லும் தனித்து நின்று ஆட்சியமைக்கும் பலம் முஸ்லிம் கட்சிகளுக்கு கிடைக்கவில்லை. முஸ்லிம்களான நஜீப் ஏ மஜீத் மற்றும் நஸீர் அஹமட் ஆகியோர் முதலமைச்சராகியிருக்கலாம். இது, முஸ்லிம்களின் தனித்துவத்தை பறைசாற்றியிருக்கவில்லை. வட மாகாணத்தைப் போன்று ஏக தமிழ் பிரதிநிதிகளின் மாகாணமாக, கிழக்கை கருத முடியாதிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

பிரிந்து நின்றதா? அல்லது பிரதிநிதித்துவப் பற்றாக்குறையா? இல்லாவிடின் பெரும்பான்மை என்ற நிலைக்கு முஸ்லிம் சனத்தொகை இல்லையா? இந்தக் கோணங்களில் தான், கள ஆய்வுகள் விரிய வேண்டும். இதனூடாகவே இயலாமைகளை புரிந்து கொள்ள முடியும். பொதுவாக வடக்கு தமிழர் பெரும்பான்மை பூமியென்றால், கிழக்கு முஸ்லிம்களின் பெரும்பான்மைப் பிரதேசமென்ற மன நிலையிலே முஸ்லிம்கள் உள்ளனர். இதைத் தவறெனக் கூறவில்லை. தத்துவார்த்தமாக நிரூபிக்க வேண்டும். இவைகள்தான், இயலாமை அரசியலாக நோக்கப்படுகிறது.

உண்மையில், இணைந்த வடகிழக்கில், தென்கிழக்கு அலகில்தான் முஸ்லிம்களின் பெரும்பான்மை பலப்படலாம். அல்லது பிரிந்த கிழக்கிலும் ஒரு தென்கிழக்குக்குச் சாத்தியமிருக்கலாம். இங்கு, எது, சாத்தியமென்பதை முஸ்லிம் தரப்புக்கள் நிரூபிக்க நேரிட்டுள்ளது.

இந்தப் பின்னல் பின்னணியிலிருந்துதான், அண்மைய ஆளுநர் நியமனமும் நோக்கப்படுகிறது.

கரையோர மாவட்டம், தனியலகு இன்னும் தனித்தரப்பு போன்ற அடையாள அரசியல்களை அடைய முடியாதது போனமைக்கு அல்லது சர்வதேசப்படாதமைக்கு நிறுவப்பட்ட தரவுகள் இல்லாமைதான் காரணமோ தெரியாது.

## ஆளுநர் நியமனம் மற்றொரு ஆதாரம்

எதிர்க்கட்சி அரசியலில், எதையும் செய்ய முஸ்லிம் தலைமைகளால் இயலவில்லை ஏன்? அரசாங்கத்தின் சிறுபான்மை விரோதப் போக்குகளை சர்வதேசமயப்படுத்துமளவுக்கு முஸ்லிம்களை சமூக மயப்படுத்த இத்தலைமைகள் தவறிவிட்டன. ஆளுந்தரப்பிலிருந்தாலும் அர்த்தமில்லை என்ற நிலை நீடிக்கவும் இவைகள்தான் பங்களித்திருக்கின்றன.

தேசிய காங்கிரஸின் தற்போதைய நிலை இதற்குப் பொருந்துகிறது. முஸ்லிம் சமூகமே எதிர்த்து நிற்கையில், ராஜபக்ஷக்களை ஆதரித்தது தேசிய காங்கிரஸ். ஏனைய தலைமைகளை எதிரணியில் அமர்த்திவிட்டு, சாதனை அரசியலுக்கு ஆயத்தமான வேளையில்தான் முதலடி விழுந்தது இக்கட்சிக்கு. இதனால், எதிரணியிலிருந்து ஏவப்படும் அம்புகளையும் அரசுக் குள்ளிருந்து தோண்டப்படும் குழிகளையும் எதிர்கொள்கிறது தேசிய காங்கிரஸ். இந்த அம்புகளிலிருந்து தப்பிக்க ரணிலுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதும் இக்காங்கிரஸின் நவீன ராஜதந்திரம்தான். தனது கட்சி சார்பாக கிழக்கு மாகாணத்துக்கு ஒரு ஆளுந ரை நியமிக்குமாறு தேசிய காங்கிரஸ் கோரியிருந்தும் அரசாங்கத்தின் அமுக்கக் குழு அக்கோரிக்கையை கை, கழுவி விட்டது.

இவ்விடயத்தில், ஜனாதிபதியின் ஆசைகளும் நிறைவேறியதாக இல்லை. இதனால்தான், அதாஉல்லா, வஜிர, மயந்த மற்றும் ராஜித ஆகியோரை அமைச்சராக்கும் முயற்சிகள் புதிதாக முளைக்கின்றன. உண்மையில், கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம் முஸ்லிம் அரசியலில் ஒரு புகைச்சலை ஏற்படுத்தியே இருக்கிறது.

இதற்கான காரணங்கள் கனதியானவையே. பூர்வீகப் புலம், தனித்துவ அபிலாஷை, பிரத்தியேக பிரதிநிதித்துவம் மற்றும் உரிமை அரசியல் பற்றி போதிய அனுபவம் இல்லாதவர் என்பவைதான் முன்னிலையிலுள்ள கனதிகள். மாற்று இனத்தவரென்ற விமர்சனம் இரண்டாமிடமே. சிறுபான்மை சமூகங்களின் தாயக அடையாளங்கள் இரண்டில் ஒன்றுக்கு தமிழர் என்றால், அடுத்ததுக்கு முஸ்லிம்தான் என்ற மனநிலையிலும் சிலர் உள்ளனர். வடக்கையும், கிழக்கையும் இணைப்பதற்கான இதர வேலைகளை ஆராயவா இருவரும் என்றெண்ணும், பாமர முஸ்லிம்களும் இருக்கவே செய்கின்றனர். இச்சந்தேகங்களைக் களையும் வகையில் கடமையாற்றும் பொறுப்பு முஸ்லிம் தலைமைகளின் தலைகளில் சுமத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஆளும் தரப்பு தலைமைகளில் சுமத்தப்பட்டுள்ளவைகளே அதிகம்.

கிழக்கில் உள்ள ஒரேயொரு முஸ்லிம் கெபினற் அமைச்சருடன் புதிய ஆளுநர் இணைந்து பணியாற்றுவதும் கிழக்கில், புதிதாக நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படும் மற்றொரு முஸ்லிம் கெபினற் அமைச்சரை நியமிப்பதும்தான் சந்தேகம் மற்றும் சலசலப்புக்களை நீக்கலாம்.

கிழக்கின் கதைகளாக இவைகளே உள்ளன. எவ்வாறாயினும் இச்சலசலப்புக்களின் ஆயுள் எதுவரைக்கும் என்பது தான் தெரியாதுள்ளது

# முள்ளிவாய்க்கால்

## கண்ணீரில் தோய்ந்த உணர்வு எழுச்சி நிகழ்வு



# சிங்களம் அடைந்த வெற்றி இராணுவ வெற்றி அல்ல; இன அழிப்பின் வெற்றி;

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறிய பெரும் தமிழினவழிப்பின் நினைவுகளை, அறச்சீற்றத்துடன் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஒன்றாய்க்கூடி நினைவுகூரும் நாள் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமார் தெரிவித்தார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

இற்றைக்கு 14 ஆண்டுகளுக்கு முன்னர், 2009 ஆம் ஆண்டு மே மாதம் சிங்கள இனவாதப்பூதம் தமிழீழ தேசம் மீது நடாத்திய இனவழிப்பு வெறியாட்டத்தின் நினைவு நாள்.

நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறிய பெரும் தமிழினவழிப்பின் நினைவுகளை, அறச்சீற்றத்துடன் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஒன்றாய்க்கூடி நினைவுகூரும் நாள்.

நமது மக்கள் கொத்துக் கொத்தாய் சிங்களத்தின் இனவழிப்பில் கொல்லப் பட்டமை நமது தேசத்தில் ஏற்படுத்திய பெருந்துயரை நாம் தமிழீழத் தேசிய துக்கநாளாய் அனுட்டிக்கும் நாள்.

சிறிலங்கா அரசு தமிழினவழிப்பினூடு நம் தேசத்தில் ஏற்படுத்திய பெருந்துயர் ஓர் ஆறாத வடுவாக தமிழ் மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கிறது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் சிங்களம் அடைந்தது யுத்தத்தை வெற்றி கொண்ட ஓர் இராணுவ வெற்றி அல்ல. உணவுத்தடை, மருந்துத்தடை, இடைவிடாத குண்டு வீச்சுகள் காரணமாக மக்களை பராமரிக்கும் சுமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தோள்கள் மீது சுமத்தப்பட்டது.

கஞ்சிக் கொட்டில்கள் அமைத்தும், 24 மணி நேர மருந்துக் கொட்டகைகள் அமைத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் ''யுத்தகளத்தில் போராடுவதற்கு இருக்கும் வீரத்தை விடவும், யுத்தத்தால் ஏற்படும் சுமையை தாங்குவதற்கான வீரம் பெரிதாக இருக்க வேண்டும்'' என்ற சன் டுஸ் (*Sun Tzu*) இன் வாசகங்களிற்கு இலக்கணமாக செயற்பட்டார்கள்.

இச் சுமை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலுவில் எதிர்த் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாகவே சிங்களம் வெற்றி கொண்டது. இது ஓர் இனவழிப்பு. எந்தவித அறமுமின்றி இனவழிப்பின்மூலம்மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆக்கிரமிப்பு.

முள்ளிவாய்க்காலில் சிறிலங்கா அரசு எழுப்பிய வெற்றி முழக்கும் ஓர் இன வழிப்பு வெற்றி முழக்கம். ஆக்கிரமிப்பு வெற்றி முழக்கம். இது குறித்து உண்மையில் சிங்கள மக்கள் வெட்கித் தலை குனிந்திருக்க வேண்டும்.

இத் தமிழினவழிப்புக் குற்றவாளிகள் அனைத்துலகச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். சிறிலங்கா அரசுதான் இனவழிப்பின் முதற் குற்றவாளி என்பதுவும் நிலைநிறுத்தப்பட வேண்டியது.

தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதற்காக மட்டுமல்ல, உலகின் ஏனைய நாடுகளில் இனவழிப்பில் ஈடுபடக்கூடிய கொடிய ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை வழங்குவதற்காகவும் தமிழினவழிப்புக் குற்றவாளிகள் அனைத்துலக நீதிப்பொறிமுறையின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டியவர்கள்.

தமிழினவழிப்புக் குற்றவாளிகள் தண்டிக்கபடும் நிலையை ஏற்படுத்தவதற்காக நாம் தொடர்ச்சியாகப் போராட வேண்டியுள்ளது.

நீதி, அனைத்துலக உறவுகளாலும், நலன்களாலும அலைக்கழிக்கப்படும் நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அவலநிலைக்கு அனைத்துலக சமூகம் பொறுப்பெடுக்க வேண்டும்.

இக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது மட்டும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாம் வழங்கப் போதில்லை.

தமிழ் மக்களுக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு அமைதல் ஒன்றே சிங்களத்தின் தமிழினவழிப்புத் திட்டத்தை ஈடு செய்யக் கூடிய அரசியல் ஏற்பாடாக அமைய முடியும் என்பதனை இந் நாளில் அனைத்துலக சமூகத்திற்கு நாம் வலியுறுத்திச் சொல்வோம்.

ஒற்றைமையச் சிந்தனை என்பது இலங்கைத்தீவு தமக்கே மட்டும் சொந்த மானது என்பதனை அடிப்டையாகக் கொண்டு, தாம் தீர்மானிக்கும் விதத்தில் தான் ஏனைய மக்கள் வாழ வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டுள்ளது. இச் சிந்தனை மகாவம்ச மனப்போக்கிலிருந்து கிளர்தெழுந்து வருகின்றது.

சிங்கள தேசம் தவிர்ந்த ஏனைய மக்கள் தேசமாக வாழும் நிலை இருப்பின் இது சிங்கள தேசத்துக்கு ஆபத்தானது என்ற அபத்தமான எண்ணமும் இந்த சிங்கள ஒற்றை மையச் சிந்தனையில் இருக்கிறது.

இதன் வெளிப்பாடாகத்தான் பல்வேறு திட்டமிட்ட நடவடிக்கைகள் ஊடாகத் ஈழத் தமிழ் மக்களின் தேசத் தகைமையை அழிப்பதற்கு சிங்களம் பகீரத முயற்சி எடுத்து வருகிறது.

சிங்களம் எதிர்பார்த்தவாறு முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின் தமிழ் மக்களைச் சரணாகதியடைய வைக்கும் திட்டத்தில் சிங்களத்தால் வெற்றி காண முடியவில்லை.

தாயக மண்ணில் விதையாக வீழ்ந்திருக்கும் மாவீர்கள் நமது மக்களின் மனங்களில் நிறைந்திருப்பதால் அவர்களை எவரும் சரணாகததியடைய வைப்பதும் இலகுவானதல்ல.

ஈழத் தமிழர் தேசம், நாடு கடந்த தேசமாகப் பரிணமித்திருப்பதால் ஈழத் தமிழர் தேசத்தின் அங்கமாக அமைந்துள்ள புலம்பெயர் தமிழ் மக்களும் சிங்களத்தின் தமிழர்களின் சரணாகதிக் கனவுக்குச் சிம்மசொப்பனமாக உள்ளனர்.

நமது தொப்புள் கொடி உறவாக உள்ள தமிழ் நாட்டு மக்களும், உலகின் ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் ஈழத் தமிழ் மக்கள் மீதான சிங்களத்தின் இனவழிப்ப முயற்சிக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களாக உள்ளனர்.

இவையெல்லாம் ஈழத் தமிழர் தேசத்துக்கான பாதுகாப்புக் கவசங்களாக உள்ளன. இருந்த போதும், தமிழ் மக்கள் மீது சிங்களம் கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு நீண்ட காலத்துக்கு நீடிப்பின் அது ஆபத்தை தரக்கூடியது என்பதனையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனது ஆயுதப்போராட்டத்தை மௌனித்த பின்னர் சிங்கத்தின் கட்டமைப்புசார் இனவழிப்பு முயற்சியை தடுத்து நிறுத்தக் கூடிய வலிமை தமிழர் தேசத்திடம் பலவீனப்பட்டுள்ளது என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இச் சூழலில் தனது கட்டமைப்புசார் இனவழிப்பு முயற்சியை சிங்களம் வேகப் படுத்த முயலும். இது குறித்து தமிழர் தேசம் மிகவும் விழிப்பாக இருந்து இம்முயற்சிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்..

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு நடைபெற்று 14 ஆண்டுகள் ஆகியும் ஈழத் தமிழ் மக்களுக்கான நீதி வழங்குவதில் அனைத்துலக சமூகம், குறிப்பாக அனைத்துலக அரசுகள் பராமுகமாக இருக்கின்றன என்ற உண்மையினை நாம் வேதனையுடன் பதிவு செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

முள்ளிவாய்க்காலில் சிங்களம் ஆடிய வெறியாட்டம் ஆதாரங்கள் ஏதுமின்றி, சாட்சிகள் ஏதுமின்றி நடந்து முடிந்ததொரு நிகழ்வல்ல.

முள்ளிவாய்காலில் இருந்து இறுதிக் கட்டத்தில் வெளியேறிய மக்கள் ஆயிரக் கணக்கான சாட்சியங்களாக உள்ளனர். இறுதி நேரத்தில் நிகழ்ந்தவை அனைத்துலக அரசுகளிடம் செய்மதிப் படங்களாக உள்ளன.

அரசுகளுக்கு சார்பான உலக ஒழுங்கும், இலங்கைத்தீவின் அரசாக சிங்கள சிறிலங்கா அரசு இருப்பதுவும், இந்த அரசு அனைத்துலக அரசுகளின் பங்காளியாக இருப்பதுவும் அரசற்ற ஈழ தேச மக்களுக்கு நீதி கிடைப்பதற்குத் தடையாக உள்ளன.

நாம் ஒரு அரசாக மாறும்போதுதான் எமக்கான முக்கியமான நீதியைப் பெறலாம்.

உண்மையில் இந்த அனைத்தலக அரசுகள், மக்களைப் பாதுகாப்பதற்காக விடுதலைப்புலிகள் முன்வைத்த யுத்தநிறுத்தக் கோரிக்கையை செவிமடுத்து யுத்த நிறுத்தத்தை கொண்டு வந்திருந்தால் நடைபெற்று முடிந்த இனவழிப்பைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

5 ஆம் பக்க பேட்டியின் தொடர்ச்சி...

# கிழக்கு மாகாணத்துக்கு...




மாகாண சபையினுடைய பலவீனம், ஈஸ்ற்றர் தாக்குதலின் பின்னர் வந்த தனிப்பட்ட கோபங்கள், அனைத்தையும் வைத்துக் கொண்டு எம்மை விரைவாக வளர்த்தெடுக்க வேண்டிய சூழல் வந்துள்ளது. பின்னர் கொவிற் தொற்று, அரசியல் ஸ்திரத்தன்மை, போன்றவற்றோடு, ஏன் அப்போதிருந்த மக்கள் எழுச்சி இல்லை என்ற பார்வை இருக்கத்தான் செய்கிறது. கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் எமது கட்சி சரிவின் விழிம்பு நிலைத் தோல்விக்குச் செல்லும் நிலைக்கு சரிவு இல்லை.

அடுத்து வரும் காலங்களில் சில மாற்றங்களைச் செய்து கொடுப்போம் என்கின்ற நம்பிக்கையின் ஊடாக மக்களை அணிதிரட்டி கடந்த முறையைவிட எதிர்காலத்தில் தேர்தல் வந்தால் ஒரு பிரமாண்டமான வெற்றியை நாம் அடைவோம்.

## அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசு கட்சி தோல்வி அடையும் கட்சியாக இருக்கும்

## எதிர்வரும் தேர்தல்களிலும் பிரமாண்டமான வெற்றியை நாம் அடைவோம்.

**கேள்வி: தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு பற்றி என்ன கருதுகிறீர்கள்...?**

**பதில்:** இது தமிழரசுக் கட்சி உதயமான காலத்திலிருந்து சிங்களவன் வாறான், சிங்களவன் வாறான், என கதைத்தவர்கள் சிங்கள மக்களைத் திருமணம் செய்தது தான் வரலாறு. இது ஒரு அச்சமூட்டும் நிலமையாகும். இத்தோடு சேர்த்து தொல்பொருளை இணைக்க முடியாது. தொல்பொருளைப் பாதுகாப்பது அந்த அந்த மாவட்டத்திற்குமான விடயமாகும். அதனை கொழும்பிலிருந்து சாதுக்களும் தலையீடு செய்யாமல் சாதாரணமாக வழக்கமான முறையில் பாதுகாக்கும் முறைமையில் நாங்கள் கையாள வேண்டும்.

மகாவலி குடியேற்றத்தில் தமிழர்களுக்குரிய உரித்தை சரியாக பயன்படுத்தி எமது காணிய ற்ற மக்களுக்கு பெற்றுக் கொடுத்து நீர்ப்பாசனத்தை வழங்கி உற்பத்தியை மேம்படத்தினால் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள். அதுபோல் மேச்சல் தரை விடயத்தையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் எடுத்திருக்கின்றோம் அதனை தீர்த்தால் அரசியலில் சலசலப்பை ஏற்படுத்துகின்ற விடயத்தை முடித்துக் கொள்ளலாம். ஆனால் 70 வருடகாலமாக காட்டிய பூச்சாண்டியை தற்போது வந்து காட்டமுனைகின்றார்கள். அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பது எங்களது கடமையாகும். எனக்கும் அது ஒரு சவாலான விடையம் இருந்தும் அதனை நாம் நிச் சயம் செய்து கொடுப்போம்.

**கேள்வி: நாட்டின் உணவு தன்னிறைவு முயற்சியில் கிழக்கின் வகிபாகம் எவ்வாறாக உள்ளது?**

**பதில்:** கிக்கு மாகாணம் உணவில் தன்னிறைவு இல்லை என சிலர் தெரிவிக்கின்றார்கள் அது உண்மையில் தவறு, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளிலுள்ளவர்கள் இற்குள்ள மக்களின் நிலமையைப் பரீட்சித்துப் பார்க்க முடியாது. கிராமத்து மக்கள் அவர்களுடைய சாதாரண வாழ்வில் அவர்கள் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றார்கள். இருந்த போதிலும் நாடு ரீதியில் சுகாதாரம், கல்வி மேம்பாடு, போன்றவற்றிற்குள் நாங்கள் இன்னும் வளரவில்லை.

இதற்கு எமது நீண்ட காலப் பிரச்சனைகள், உள்ளிட்ட பல விடயங்கள் தாக்கம் செலுத்தியிருக்கின்ற. தற்போது நாங்கள் பிரச்சனைகளை இனம் கண்டு மெல்ல மெல்ல வளர்ந்த வந்திருக்கின்றோம். உணவு உற்பத்தியினுடைய அதிகரிப்பு, உணவு பதப்படுத்தல், ஏற்றுமதி, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், போன்ற பலவறைறை நாம் இனம் கண்டுள்ளொம் இவற்றை விரைவு படுத்துகின்ற போது உற்பத்தி துறையிலும் ஏற்றுமதி துறையிலும், பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**கேள்வி: புதிய பயங்கரவாத சட்டம் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** உலகத்திலே ஏற்பட்டிருப்பது பங்கரவாத சவாலாகும். பயங்கரவாத செயற்பாடகளில் ஈடுபடுபவர்களை கைது செய்து தண்டன வழங்காவிட்டால் தீவிரத் தன்மை கூடிவிடும். இலங்கையில் 1979 ஆம் ஆண்டு தமிழர்களுக்குள்ளோ ஏற்பட்ட ஆயுத முதண்பாடுகளுக்காக கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

அப்போது எனக்கு 3 வயது பின்னர் 40 வயதிலே அச்சட்டத்திற்குட்பட்டு நானே சிறைக்குச் சென்றேன். அது எவ்வளவு கொடூரமான சட்டம் என்பதை நான் அறிவேன்.

இருந்தாலும், நாடு, ஜனநாயகம். இறைமை என்றெல்லாம் பார்க்கும்போது தற்போதுள்ள உலக சவால்களுக்கு ஈஸ்ற்றர் குண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் வேறு விதமான உலக பயங்கரவாதம் கூட எமது நாட்டுக்குனுள் ஊடுருவக்கூடிய சந்தர்ப்பங்கள் எற்பட்டிருக்கின்றது. ஆகையால் தற்போதிருக்கின்ற சவாலைக் கட்டுப்படுத்தி, மக்களைப் பாதுகாத்து நிருவாகத்தைக் கொண்டு செல்லக்கூடிய ஒரு முறையிலான சட்டமறு சீரமைப்பு அவசியமாகிறது.

அதிலே மக்களும். வெகுஜென ஊடகங்களும் அஞ்சுகின்ற ஜனநாயகத்திற்கு விரோதமாக நிகழ்ந்துவிடுமோ என்கிற அந்த அச்சத்தை நீக்க வேண்டும். அதற்காக நாட்டை முடக்குகிற பயங்கரவாதத்திற்காக பயிற்சிகளை வழங்குகின்ற சந்தர்ப்பங்களை உருவாக்காத வண்ணமும், தேவையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அவசியமாகின்றது. இதனை மிகக் கவனமாக அரசாங்கம் மேற்கொள்ளும் அப்போது நாம் பாராளுமன்றத்திலே நியாயமானவற்றிற்கு நாங்கள் ஆதரவளிப்பதுதான் என்னுடைய முடிவு.

**கேள்வி: அபிவிருத்திக் குழுத் தலைவராக நீங்கள் செயற்பபட்டுவரும் இந் நிலையில் பா.உ. சாணக்கியன் உங்கள மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை எவ்வாறு கருதுகின்றீர்கள்?**

**பதில்:** ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஊடா க அரசியலுக்கு வந்தவர்தான் பா.உ சாணக்கியன். அதில் வெற்றி பெற முடியாது என நினைத்து தமிழரசுக் கட்சியில் இணைந்து மக்களை உசுப்பேற்றி அவரது பாட்டனாரின் காலப்பகுதி போல் வெற்றி பெறலாம் என நினைத்து பா.உ சுமந்திரன் போன்றவர்கள் உதவி செய்ததன் அடிப்படையில், அவர் வந்த நோக்கத்தை தவிர்த்து தற்போது மாற்று வேடத்தைத் தரிக்கின்றார்.

அவர் அடுத்த தேர்தலிலும் அவர் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக தற்போது எம்மை மக்களிடமிருந்து தனிமைப் படுத்த வேண்டும், எனநினைக்கிறார். எமது த.ம.வி.பு. கட்சியை மக்களிடம் ஒரு தவிர்க்க முடியாத கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த போக்கின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து நிருவாக ரீதியான எழுச்சியும், எமது கட்சி உருவாக்கி விட்டால் அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடையும் கட்சியாக தமிழரசுக் கட்சி இருக்கும். அதில் பாதிக்கப்படப்போபவர் பா.உ. சாணக்கியனும்தான்.

7 ஆம் பக்க தொடர்ச்சி...

# முள்ளிவாய்க்கால்

இனவழிப்பு நிகழ்ந்தாலும், தமது பூகோள மற்றும் புவிசார் நலன்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட வேண்டும் என அனைத்துலக அரசுகள் காட்டிய பச்சைக்கொடியே முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பைச் சாத்தியமாக்கியது.

இவ் இலக்கு தொலைநோக்குக் கொண்ட இலக்காக இருக்கலாம். ஆனால் இதனை விட்டால் வேறு தெரிவேதும் எமக்கு இல்லை என்பதை காலம் நமக்கு நன்கு உணர்த்தியருக்கிறது.

இதனால், ஈழத் தமிழர் தேசத்தின் இருப்பை பலமாகக் கட்டி அமைப்பதில் நாம் தேசமாக அணி திரண்டு முழுமையான கவனம் செலுத்த வேண்டும்.

ஈழத் தமிழ் தேசமாக சிந்தித்து, ஈழத்தமிழர தேசத்தின் அரசியலை கட்டமைப்பதில், சமூகநீதி நிலவும் சமூகத்தை கட்டி எழுப்புவதில, பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதில், பண்பாட்டு அழுக்குகளை நீக்கி பண்பாட்டைச் செழுமைப்படுத்துவதில் நாம் முழுமையாக ஈடுபடவேண்டும்.

இச் செயற்பாடுகளின் ஊடாக வலுவான ஈழத் தமிழ் தேசத்தை நாம் உருவாக்கும் போது நமது விடுதலைக்குத் தேவையான அடித்தளம் பலமாக அமையும்.

முள்ளிவாய்க்கால் ஈகிகளை நினைவுகூரும் இந் நாளில் ஒரு வலுவான ஈழத் தமிழ் தேசத்தை உருவாக்கும் பணியில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வோமாக.




# விரக்தியில் தொலைந்ததை எல்லோரும் சேர்ந்து தேடுவோம்



ஏ. எச். ஏ. ஹுஸைன்

சமாதானம் என்பது உண்மை, நீதி, நேர்மை, சமத்துவம் மற்றும் அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. சமாதானமும், நிம்மதியும் நிறைந்த வாழ்வு என்பது அனைவரும் விரும்பும் ஒரு அலாதிப் பிரியமான வாழ்வியலின் அடிப்படை அம்சம். அத்தோடு அது ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் உரிமையாகவும் இருக்கிறது.

நிம்மதி, சமாதானம் என்பது அரசனுக்கும் தேவை ஆண்டிக்கும் தேவை. நீதிபதிக்கும் தேவை வழக்கறிஞருக்கும் தேவை. வாதிக்கும் தேவை பிரதிவாதிக்கும் தேவை. தத்திக்கும் குழந்தைக்கும் தேவை. தள்ளாடும் வயோதிபருக்கும் தேவை. ஒட்டு மொத்தத்தில் இந்த இயற்கைப் பிரபஞ்சத்திற்குமே நிம்மதி தேவை. அதனால்தான் ஒவ்வொரு மனிதரும் சமாதானத்தை ஆசிக்கின்றனர். ஆனால் நம்மில் அனைவரும் அடுத்தவருக்கு அந்த சமாதானத்தை வழங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளோமா? என்பது ஆச்சரியமான விடையை அளிக்கும் கேள்விதான்.

ஒருவரது தனிப்பட்ட வாழ்விலும், அவரது சமூக வாழ்விலும் சமாதானமும் நிம்மதியும் நிலவவில்லையாயின் அங்கு துயரமும் சோர்வும் அவநம்பிக்கையும் ஏக்கப் பெருமூச்சும் இறுதியில் விரக்தியும் அழிவும்தான் மிஞ்சும். ஆகையினால் சாந்தியும் சமாதானமும் நிம்மதியும் ஒருவரது தனிப்பட்ட வாழ்விலிருந்தே ஆரம்பித்து அது சுழல் வடிவில் (நுளம்புச் சுருள்போல விரிவடைந்து) வியாபிக்க வேண்டும். தனிப்பட்ட நபருக்குள் உள்ளார்ந்த நிலையில் வளரும் சமாதானமே, அது அவருக்குள் தொடங்கி, குடும்பம், அயலவர்கள், சமூகம், பிரதேசம், நாடு என்று வளர்ந்து ஈற்றில் உலகளவில் விரிவடைய வேண்டும் என்றே சமாதான ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஆனால் உள்ளார்ந்த சமாதானத்தை அடைவதற்கு பல சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெளிப்புறச் சவால்களாக அமைந்து விடுவதாக அனுபவக் கதைகள் இருக்கின்றன. இலங்கையிலும் இவ்வாறுதான் சமாதானத்தைத் தேடுதல் என்பது ஆச்சரியமானதாகவும் அபூர்வமானதாகவும் காணும் ஒரு விடயமாக மாறிவிட்டுள்ளது. இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்ற இனவாத, மதவாத, மொழிவாதக் கோளாறுகளும் கடந்த 30 வருட காலமாக மூர்க்கத்தனமாக இடம்பெற்ற ஆயுத முரண்பாடுகளுமே சமாதானத்தைச் சீர்குலைக்கும் வெளிப்புறச் சூழ்நிலைகளாக அமைந்து விட்டன.

1948 சுதந்திரம், சிங்களம் மட்டும் பிரகடனம், ஜே. வி. பி கிளர்ச்சி, 1983 கறுப்பு ஜுலை, 1985 கிழக்கில் இனக் கலவரம், 1987 இந்தியப் படையினரின் நடவடிக்கைகள், 1990 வடக்கு கிழக்கில் இனப்படுகொலை, முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டியடிப்பு, 2004இல் சுனாமி, 2009 இறுதி யுத்தம், 2010-2018 வரை முஸ்லிம் விரோதப் போக்குகள், 2019 தேவாலய குண்டுவெடிப்பு, 2020 கொரோனா வைரஸ் தொற்று, 2022 பொருளாதார நெருக்கடி என தொடராக இடம்பெற்று வந்துள்ள நிகழ்வுகள் இலங்கையரை வெறுப்பும் விரோதமும் விரக்தியும் நிறைந்த சூழ்நிலைக்குள் தள்ளி விட்டுள்ளன. சுதந்திரத்திற்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்து இப்பொழுது வரை வன்முறைகளினால் அழிவுகளையும் ஆபத்துக்களையும், அவநம்பிக்கைகளையும் எதிர்கொண்டு அனுபவப்பட்ட நமக்கு முன்னால் பல கேள்விகள் உள்ளன.

இன மத மொழி வேறுபாடுகளின்றி நாம் அனைவரும் இலங்கையர்தான் என்று கொண்டால் இலங்கை ஒரு சமாதான நாடாகத் தோன்றுகின்றதா? ஒவ்வொருவரும் தமக்குள்ளே சமாதானமாக இருக்கின்றோமா? அடுத்த சமூகங்கள் அமைதியுடன் வாழ நாம் ஏதாவது செய்திருக்கின்றோமா? சமாதானமாக இருக்கும் உணர்ச்சியை எவ்வாறு உணர்ந்து கொள்வது? எந்தத் தருணத்தில் சமாதானமாக இருப்பதாகவும் எந்தத் தருணத்தில் சமாதானமாக இல்லை என்றும் உணர்கின்றோம்? எத்தகைய எண்ணங்கள் அல்லது நடவடிக்கைகள் எங்களைச் சமாதானமாக வைத்திருப்பதற்கு உதவி புரிகின்றன? என்ற கேள்விகளை எழுப்பி குறைந்தபட்ச சமாதானத்தையாவது நிலைநாட்டுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

வேறுபாடுகள், பிரிவுகள் என்பது இயற்கையானது எமக்கிடையேயான வேறுபாடுகள் யாவை? பால் நிலை, நிறம், வயது, ரசனை, மொழி, பிரிவுகள் என்பவை அவற்றிலடங்கும். தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் சிங்களவர்களாயினும் எல்லாச் சமூகங்களும் இழந்தவை ஏராளம். சமாதானத்தை குறைந்தபட்சம் செலவில்லாமல் ஒரு புன்சிரிப்புடன் ஆரம்பிக்கலாம். இந்த உள்ளார்ந்த புன்சிரிப்புக்கு மொழி, மதம், பிரதேசம், இனம், பால் வேறுபாடு, அதிகார அந்தஸ்து அல்லது தொழில் நிபுணத்துவம் என்பவை ஒருபோதும் ஒரு தடையாக இருக்கப் போவதில்லை.

''ஆயிரம் மொழிகள் பேசும் இந்த மானிடர் செய்வது மோசம், பேசும் ஒரு மொழியாலே இந்தப் பேடை அழைப்பது பாசம்'' என்று ஒரு பழைய திரைப்படப் பாடலில் கவிஞர் ஒரு வெண்புறா தனது துணையை தலையால் அழைப்பது பற்றிய காட்சியொன்றில் தெளிவுபடுத்துகிறார். அதனால்தானோ என்னவோ சமாதானத்தின் சின்னமாக புறாக்களை பயன்படுத்துகிறார்கள். சமாதானத்தின் தூதுவர்களாக புறாக்களைப் பறக்கவிடும் நிகழ்வுகளையும் கால வரலாறுகளில் நாம் காண்கிறோம். சமாதானத்தை வன்முறை மூலம் ஒருபோதும் அடைய முடியாது. வன்முறையைப் பாவிப்பதற்குப் பதிலாக மென்முறையை அல்லது நன்முறையைப் பாவித்தே சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும் எனக் கூறிய சான்றோர்கள் அதனைச் செயற்படுத்திக் காட்டி விட்டும் சென்றிருக்கின்றார்கள். சமாதானம் புரிந்துணர்வு எனும் விதையிலிருந்து விருட்சமாக வளரலாம். ''கண்ணுக்குக் கண்'' எனும் பழிவாங்கல் முறை இந்த உலகை குருடாக்கவே உதவும் என்கிறார்கள் சமாதான செயற்பாட்டாளர்கள்.

அன்பும் இரக்கமும் அத்தியாவசியமானவை, அவை மறைத்து வைக்க வேண்டிய மர்மப் பொருள்களல்ல. அன்பும் இரக்கமும் இன்றி இவ்வுலகில் மனிதரும் ஏனைய ஜீவராசிகளும் கொடி செடி மரங்களும் உயிர்வாழ முடியாது. இயற்கையிலே இளவேனிற்காலம், வசந்த காலம், கார் காலம் என்று இவ்வாறு சுழன்று கொண்டிருக்க மரம் செடி கொடிகளெல்லாம் இன பேதங்களுக்கு அப்பால் இயற்கையின் விநோதங்களை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இதிலே மனிதர்கள் கண்குளிர்ச்சி அடைகின்றார்கள். மரம் செடி கொடிகள், மனிதர்கள் காட்டும் எந்த விதமான வேறுபாடுகளுக்கும் அப்பால் இயற்கை நியதியின் கீழ் இயல்பாக வளர்கின்றன. பாகுபாடு காட்டும் மனித குலம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பாடம் இயற்கையிடம் நிறைய இருக்கின்றது.

தமிழ், முஸ்லிம், சிங்களவர்களின் நிலங்களில் எங்கு வளர்ந்தாலும் மரம் செடி கொடிகள் அதன் இயற்கைப் பண்புகளோடு எழிலாய் வளர்ந்து பூத்து காய்த்து குலுங்கி கலகலப்பாய் இருக்கின்றன. நாமும் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால் முதலில் நாம் அன்பையும் இரக்கத்தையும் அரவணைத்துக் கொள்ள வேண்டும். அன்பினாலும் இரக்கத்தினாலும் ஆற்றப்படும் காரியங்கள் எவ்வளவு சிறியனவாக இருந்தாலும் அவை ஒருபோதும் வீணாகிப் போவதில்லை. ஒருவர் முதலில் தன்னை நேசித்தால் அதன் பின்னர் தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் நேசிக்க ஆரம்பித்து விடுவார். அடுத்தடுத்த நிகழ்வாக அயலவர் மீது அன்பு ஏற்படும், சகிப்புத் தன்மை என்பது சமாதானத்தை இயலுமானதாக்கக் கூடிய ஒரு நற்பண்பாகும். சமாதானம் என்பதை அடைந்து கொள்ளத் துடிக்கும் ஒரு இலக்காக கொண்டிருந்தால் சகிப்புத்தன்மை என்பது அதன் வழிமுறையாகும். எங்களது குடும்பம், நண்பர்கள், சமூகத்தாருடன் ஒற்றுமையாக இருப்பதற்கும் நாம் எமது வேற்றுமைகளைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் சகிப்புத்தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும். எல்லா இழப்புக்களையும் ஓரளவு ஈடுசெய்யக்கூடியதாக இருந்தாலும் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டையும் நிரந்தர அமைதியையும் தோற்றுவிப்பதுதான் அவசரமும் அவசியமும் ஆகும்.

நாம் எல்லோரும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இந்த விடயத்தில் எமது கசப்பான கடந்தகால நிகழ்வுகளின் அனுபவங்கள் எந்த சமுதாயத்தையும் குறிவைத்துக் குற்றம் சுமத்துவதாக அமைந்து விடக்கூடாது. குற்றம் சுமத்துவதற்கும் பழிவாங்க முயற்சிப்பதற்கும் பகைமை பாராட்டுவதற்கும் பதிலாக எதிர்காலத்தினை ஒற்றுமைதயக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளை இனம் காண்பதே எமது பிரதான இலக்காகவும் முயற்சியாகவும் இருக்கவேண்டும்.

அடுத்த சமூகத்தாரோடு அந்யோன்யமாக வாழ்ந்தவர்கள் தமது பூர்வீகப் பூமிகளிலிருந்து விரட்டப்பட்டு, அவர்களது சிறார்கள் அகதிகளாகப் பிறந்து, அகதி முகாம்களிலேயே வளர்ந்து, அங்கேயே திருமணம் முடித்து அகதி முகாம்களிலேயே குடித்தனம் நடத்தும் துர்ப்பாக்கிய நிலை இலங்கைச் சமூகங்களுக்கு ஏற்பட்டு இப்பொழுது கால் நூற்றாண்டைக் கடந்து கொண்டிருக்கின்றோம். எனவே, இப்பொழுது கிடைத்துள்ள அரிய வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் நன்மை பெறக்கூடியதாக வழிவகை செய்யப்பட வேண்டும் என்பதையே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். தேசத்தையும் மக்களையும் எழுச்சி மிக்க ஒரு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வது இன்றியமையாதது.

அதற்காக,

**''இலங்கையில் எல்லோரும் சமாதானத்தைத் தேடுவோம்''**



# ஸ்மார்ட்போன்கள் குழந்தைகளுக்கு..?

## கவனத்தை ஈர்க்கும் பதிவு

சமீப காலங்களில் குழந்தைகளிடம் ஸ்மார்ட்போன்களை கொடுப்பது மிகவும் சாதாரண விஷயமாகி விட்டது.

ஸ்மார்ட்போன் கேமிங், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் குழந்தைகளின் வெளியுலக ஆர்வத்தை குறைக்கின்றன.

ஸ்மார்ட்போன்கள் இன்று நம் வாழ்க்கையை புரட்டி போட்டுவிட்டன என்று கூறலாம். ஸ்மார்ட்போன்களால் ஏராளமான நன்மைகள் உண்டு என்று கூறினாலும், இவற்றை குழந்தைகளுக்கு கொடுக்கலாமா? என்ற கேள்வி அனைவரின் ஆழ்மனதில் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும். சமீப காலங்களில் குழந்தைகளிடம் ஸ்மார்ட்போன்களை கொடுப்பது மிகவும் சாதாரண விஷயமாகி விட்டது.

90-ஸ் கிட்ஸ் போன்றில்லாமல், இந்த காலத்து குழந்தைகள் வெளியில் விளையாடுவதை தவிர்த்து ஸ்மார்ட்போன் பயன்படுத்தவே ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஸ்மார்ட்போன்களில் கேமிங் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் குழந்தைகளின் வெளியுலக ஆர்வத்தை குறைத்துவிடுகின்றன. குழந்தைகள் அளவுக்கு அதிகமாக ஸ்மார்ட்போன் பயன்படுத்துவது, பெற்றோருக்கு மிகவும் கவலை தரும் செயலாகவே இருக்கிறது.

இந்த நிலையில், சியோமி இந்தியா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மனு குமார் ஜெயின் வெளியிட்டு இருக்கும் சமீபத்திய அறிவிப்பு அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளது. லின்க்டு-இன் தளத்தில் அவர் வெளியிட்டிருக்கும் பதிவு, குழந்தைகளின் நன்மைக்காக பெற்றோர் செய்ய வேண்டிய மறுபரிசீலனைகளை கொண்டுள்ளது.





இந்திய சந்தையில் முன்னணி ஸ்மார்ட்போன் நிறுவனம் சியோமி. இந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தான் மனு குமார் ஜெயின். இவரே ஸ்மார்ட்போனுக்கு எதிரான கருத்துக்களை பகிர்ந்து இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. இவரது லின்க்டு-இன் பதிவு, 'குழந்தைகளிடம் உங்களின் ஸ்மார்ட்போன்களை கொடுப்பதை நிறுத்துங்கள்' எனும் தலைப்பு கொண்டுள்ளது.

சேபியன் லேப்ஸ் வெளியிட்டு இருக்கும் அறிக்கையை நண்பர் ஒருவர் பகிர்ந்து இருக்கிறார். அதில், 'குழந்தைகளிடம் இளம் வயதிலேயே ஸ்மார்ட்போன் மற்றும் டேப்லட்களை கொடுப்பதால், அவர்களது இளமை காலம் பாதிக்கப்படுவதோடு, பெரியவர்கள் ஆகும் போது அவர்களுக்கு மனநிலை சார்ந்த குறைபாடுகள் ஏற்படுகிறது.' இந்த ஆய்வின் மூலம் வெளியாகி இருக்கும் முடிவுகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

'பத்து வயதிலேயே ஸ்மார்ட்போன் பயன்படுத்த துவங்கிய பெண்களில் 60 முதல் 70 சதவீதம் பேர், பெரியவர்கள் ஆனதும் மனநிலை சார்ந்த பிரச்சினைகளை சந்தித்துள்ளனர். ஆண்களில் இதுபோன்ற பாதிப்பு 45 முதல் 50 சதவீதம் பேருக்கு ஏற்பட்டுள்ளது' என்று மனு குமார் ஜெயின் பதிவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதன் காரணமாக பெற்றோர் தங்களது குழந்தைகள் அழும் போது, உணவு சாப்பிடும் போது அல்லது பயணத்தின் போது ஸ்மார்ட்போன்களை வழங்குவதை தவிர்க்க வேண்டும். இதற்கு மாற்றாக பெற்றோர் குழந்தைகளை வெளியுலக செயல்களில் ஈடுபட வைக்கலாம். இது போன்ற செயல்பாடுகள் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கச் செய்வதோடு, கல்வி மற்றும் சமூக உரையாடல்களில் அவர்களை அதிகளவில் ஈடுபட வைக்கும்.

மனு குமார் ஜெயின் பதிவு, குழந்தைகளை மனநல பாதிப்பில் சிக்காமல் பாதுகாக்க வேண்டிய பெற்றோரின் பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது. அதிக நேரம் ஸ்மார்ட்போன் போன்ற சாதனங்களை பயன்படுத்துவதால், குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை அவரது பதிவு எடுத்துரைக்கிறது. குழந்தைகளுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமை என்றும் மனு குமார் ஜெயின் தெரிவித்துள்ளார்.

தான் ஸ்மார்ட்போன் அல்லது டேப்லட் போன்ற சாதனங்களுக்கு எதிரானவன் இல்லை என்றும், இவை நம் சமூகத்திற்கு பல்வேறு வழிகளில் பயனுள்ளதாகவே இருந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவற்றை தானும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தி வருவதாக மனு குமார் ஜெயின் தெரிவித்து இருக்கிறார். எனினும், இவற்றை குழந்தைகள் பயன்படுத்த ஆரம்பிக்கும் போது எச்சரிக்கை அவசியம் என்று மனு குமார் ஜெயின் தெரிவித்துள்ளார்.

# இணையதளம்




இணையம் என்றால் என்ன என்று அறிமுகம் தேவையில்லாத அளவுக்கு, இன்று இண்டர்நெட் எங்கும் பரவியுள்ளது. இணையத் தொடர்பு இல்லா வீடும் இல்லை; அலுவலகங்களும் இல்லை. ஏன், கிராமங்களில் மாடுகள் வைத்து பால் விற்கும் படிப்பறியாப் பெண்கள் கூட, தங்கள் வியாபாரத்திற்காக இணையத்தைப் பயன்படுத்துமளவு இணையத்தின் பயன்பாடுகள் எண்ணற்றவை.

தற்சமயம் இணையத்தை பயன்படுத்தாதவர்களை கணக்கிடுவது மிக எளிது, கோடிக்கணக்கான மக்கள் தற்சமயம் இணையத்தின் மூலம் புவியை சின்னஞ்சிறிய கிராமம் என சொல்லும் விதத்தில் பயன்பெற்று வருகின்றனர். இணையம் மிகசிறந்த பயன்களை தரும் வேலையில் அதன்மூலம் தீமைகளும் இருக்கத்தான் செய்கிறது. முறைப்படுத்தப்பட்ட இணைய வழி தொடர்புகள் மற்றும் பயன்பாடுகளின்படி மனித கலாச்சாரம் மென்மேலும் தொடர்ந்து இந்த அறிவியல் உலகில் பயணிக்கிறது.

இணையத்தின் பயன் என்ன? என்ற கேள்விக்கு இணையத்தைபயன்படுத்திசாதிக்கமுடிந்தஅனைத்து சாத்தியங்களையும் கூறலாம். இணையத்தை பயன்படுத்த தொடங்கியது முதலாக பயனற்று போன அனைத்து நற்செயல்கள் அனைத்தையும் இணைய தீமைகள் என்ற பட்டியலில் பெரும்பாலும் இணைக்க முடிகிறது.

அமர்ந்திருக்கும் இடத்தில இருந்து உலகில் உள்ள அனைத்து மூலைகளிலும் உள்ள தகவல்களை பெற முடிந்த அதே நேரத்தில், வீட்டின் அருகில் இருக்கும் நன்மையான விஷயங்களை நம் பார்வைக்கு உணராமல் போகின்ற அபாயம் இருக்கத்தான் செய்கிறது. தொடர்ந்து இணையத்தை பயன்படுத்த புதிய புதிய சாதனங்கள் உலகளவில் கண்டுபிடிக்க பட்டு வரும் அதே நேரத்தில் உடலுக்கு கேடு விளைவிக்கும் இணைய பயன்பாடும் தொடந்து அதிகரித்து வருகிறது, உதாரணமாக குழந்தைகள் செல்லிடை பேசியில் தொடர்ந்து இணையத்தை பயன்படுத்த தொடங்கியதை கூறலாம் .

மிக அருகில் அமர்ந்து தொலைக்காட்சியை பார்ப்பது எவ்வளவு தீமையானது என்று ஒரு காலத்தில் பாடம் நடத்தி வந்த நாம் தற்சமயம் பாடங்களை செல்லிடை பேசி மூலம் அவர்களது கண்களுக்கு அருகில் கொண்டு சென்று விட்டோம்.

சரித்திரப் பார்வை
சஞ்சீவி சிவகுமார்

# குரு நானக்கின் இலங்கை விஜயமும் குருக்கள்மடமும்




✍ சஞ்சீவி சிவகுமார்

கிழக்கிலங்கையின் பல்வேறு பண்பாட்டுக்கு கூறுகளையும் மரபுகளையும் தாங்கி நிற்கும் கிராமங்களில் குருக்கள்மடமும் ஒன்றாகும். சீக்கியப் போதனைகளின் தோற்றுவாயான குரு நானக்கின் பாதங்கள் பதிந்த மண்ணாக இது காணப்படுகின்றது.



சீக்கிய மதத்தினை 15ஆம் நூற்றாண்டில் குரு நானக் அவர்கள் தோற்றுவித்தார். தன்னலமற்ற சேவை, ஒற்றுமை, சமூகநீதி, நேர்மை என்பவற்றை சீக்கியமதம் வலியுறுத்துகிறது.



தீவிர மத நெறிகளைச் சாராமல், சாதி வேறுபாடு இன்றிய, ஒரே கடவுளை நோக்கிய மதக் கொள்கை களைக் கொண்டதாக சீக்கிய மதக் கொள்கைகள் காணப்படுகின்றன.

குரு நானக் தோற்றுவித்த இக்கொள்கை பின்வந்த பத்து குருக்களால் வெவ்வேறு கால கட்டங்களில் மேம்படுத்தப்பட்டு இவர்களின் போதனைகள் மற்றும் நீதிமொழிகளைச் சேர்த்து சீக்கிய மதத்தின் புனித நூலான குரு கிரந்த் சாகிப் (ஆதிக் கிரந்தம்) தொகுக்கப்பட்டது. இந்நூலைச் சீக்கிய மதத்தில் பதினோராவது குருவாகக் கூறுவர்.

சீக்கியத்தின் முதல் குருவான குரு நானக் அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த காலம் குறித்து மாறுபட்ட பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இருந்த போதியிலும் இதனை 1509க்கும் 1520களுக்கும் இடைப்பட்ட காலமாக அடையாளப்படுத்த முடியும். இலங்கையில் போர்த்துக்கேயர் காலூன்றியிருந்தாலும் கோட்டை இராட்சியம், கண்டி இராச்சியம் , யாழ்ப்பாண இராச்சியம் என்பன சுதந்திர இராட்சியங்களாகக் காணப்பட்டன. மட்டக்களப்பு இக்காலப்பகுதியில் சுதந்திரச் சிற்றரசு களாக நிருவகிக்கப்பட்டன.

குரு நானக்கின் இலங்கைப் பயணம் குறித்து பல்வேறு கதைகள் உள்ளன. மான்சூக் எனும் பஞ்சாப்பிய வர்த்தகர் இலங்கையில் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். இவர் குரு நானக்கின் போதனைகளின்





மீது காட்டிய பற்றுதலைக் கண்டு வியப்படைந்த மன்னன் சிவ்நாப், குரு நானக்கை சந்திக்க விரும்பியதாகவும் அதன் படி குரு இங்கு அழைக்கப்பட்டதாகவும் சில குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. மன்னன் சிவ்நாப் என சீக்கிய ஆவணங்களில் குறிப்பிடப்படுபவர் கோட்டை மன்னன் 9ஆம் பராக்கிரமபாகுவாக ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆயினும் அண்மையில் இது குறித்து ஆய்வு செய்த கிர்பால் சிங் அவர்கள் மன்னன் சிவ்நாப் இந்து மத நம்பிக்கை கொண்டவன் என்பதான குறிப்புகளை ஆதரப்படுத்தி இவர் மட்டக்களப்பில் ஆட்சி செய்த குறுநில மன்னனாக காட்டுவார்.

(இவரது ஆய்வறிக்கை பஞ்சாபி பல்கலைக் கழகத்தில் முன்வைக்கப்பட்டது). கிழக்கு குருக்கள்மடத்தில் குரு நானக் தங்கியிருந்ததற்கும் குருத்தூவார் ஆலயம் அமைந்ததற்கும் இதுவே அடிப்படையாயின. காலக்கோட்டின் வழியே நோக்கும்போது இது மட்டக்களப்பில் மாருதசேனனின் ஆட்சி நடைபெற்றிருக்கும் காலமாகும். ஆயினும் மன்னன் சிவ்நாப் எனக் குறிப்பிடப்படுவது மட்டக்களப்பில் காணப்பட்ட வன்னியர் ஒருவரின் பெயராக இது இருக்கலாம் என கிர்பால் சுட்டிக்காடுவார்.

பிராமணியர்களும் பௌத்த பிக்குகளும் அரச சபையில் ஆலோசகர்களாக பலத்துடன் இருந்த அக்காலத்தில் உருவ வழிபாட்டுக்கும் சடங்குகளுக்கும் எதிராக போதித்த சீக்கியம் பிராமணியத்தைத் தாண்டி குருக்கள்மடத்தில் நிலைகொண்டமை ஆச்சரியமே.

வித்தகம்
கா. சாந்தகுமார்

# இனியும் வேண்டாம்..
# பலிக்கடாவாகும் எதிர்கால சந்ததி



**ச. ரகுவரன்**
காணி வெளிக்கள போதனாசிரியர்
பிரதேச செயலகம்
கல்முனை - வடக்கு

இலங்கை கல்வித் திட்டத்தில் பொதுப் பரீட்சைகளான தரம் - 05 புலைமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சை என்பன வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகிறன.

இவற்றின் மூலம் மாணவர்கள் பல்வேறு வாய்ப்புகளுக்காகவும், தொழிற் தகைமைகளுக்காகவும், தரப்படுத்தப்படுகின்றனர். அந்தவகையில், மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் காத்திரமான ஓர் பரீட்சையாக க.பொ.த (உ/த) பரீட்சை விளங்குகின்றது. ஆனால், இந்த உயர்தர பரீட்சை மற்றும் அதன் பின்னரான மதிப்பீட்டு பணிகள் தொடர்பாக இன்று இலங்கையில் நடப்பது என்ன? இவ்வினா தொடர்பாக பெற்றோர்கள் மனதிலே தற்போது எஞ்சியிருப்பது வெறும் ஏமாற்றங்களும் எதிர்பார்ப்புகளும் மட்டுமேயாகும்.



உலகினைத் தாக்கிய கொரோனா தொற்று காரணமாக இலங்கையிலும் மற்றைய துறைகளைப் போன்று கல்வித்துறையிலும் திட்டமிட்ட நேர அட்டவணையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக பொதுப்பரீட்சைகளை உரிய காலத்தில் நடாத்தி முடிக்க முடியாமல் போனதால் சுமார் ஒரு கல்வியாண்டினால் மாணவர்கள் பின்னோக்கி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியது. இதனால் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என்று அனைத்து தரப்பினரும் பல்வேறு உளத்தாக்கங்களுக்கு உள்ளாகியிருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

இது இவ்வாறிருக்க இறுதியாக நடாத்தப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சையின் கதையானது இன்னும் ஒரு படி மேலே சென்று தாக்கங்களை இன்னும் அதிகமாக்கியுள்ளது.

## தாமதமாகிய பரீட்சை மதிப்பீடுகளால் அதிகரிக்கும் உள தாக்கமும் ஏக்கமும்



ஆம்! இப்பரீட்சையானது தாமதமாக நடாத்தி முடிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகளிலும் காலதாமதங்கள், இழுத்தடிப்புக்கள் பல்வேறு தரப்புகளாலும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால் அம்மாணவர்களின் பெறுபேறுகள் எப்போது வெளியாவது? அவர்கள் அடுத்த கட்டத் தீர்மானங்களை எப்போது எடுப்பது? பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் என்ன முடிவெடுப்பது? எல்லாமே விடை தெரியாத வினாக்களாக!

இக்கால தாமதங்களால் ஏற்பட்ட பின்னடைவானது அடுத்ததாக நடாத்த திட்டமிட்டிருந்த 2022 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த (சா/த) பரீட்சையினையும் இரு தடவைகள் பிற்போடச்செய்து ஒருவாறாக 2023 இல் மே மாத இறுதிக்கு கொண்டுசென்றுள்ளது. உண்மையிலே இந்நேரம் உயர்தரம் கற்கவேண்டிய மாணவர்கள் சாதாரணதர பரீட்சைக்காக தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். இது அவர்களுக்கு மட்டுமன்றி பெற்றோர்களுக்கும் சலிப்புத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.



**எனவே சம்பந்தப்பட்ட தரப்புகளே!**

உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடியானது மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு மட்டுமன்றி மாணவர்களின் கல்விக்காக உழைத்துத் தேய்ந்து தம் பிள்ளைகளின் எதிர்காலத்தினையே குறிப்பிலக்காகக் கொண்டு செயற்படும் ஒவ்வொரு பெற்றோருக்கும் உரியதாகும். அனைவருமே இந்நெருக்கீடுகளால், பொருட்கள் சேவைகளின் விலையேற்றத்தினால் திணறிக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு தலைப்பட்சமாக சிந்தித்து நாட்டுக்காக, நமது பிள்ளைகளுக்காக விட்டுக் கொடுப்புகளுடன் நிறைவேற்ற வேண்டிய பணிகளை இழுத்தடிப்புச் செய்வது என்பது எரிகின்ற தீயிலே எண்ணையை ஊற்றுவதற்கு சமனாகும்.

எனவே, இனியும் காலந்தாழ்த்தாது விட்டுக் கொடுப்புகளுடன் மாணவர்களின் பெறுபேறுகளை காலக்கிரமத்தில் பெற்றுக்கொடுத்து அவர்களின் எதிர்கால கனவுகளுக்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டிய பணி ஒவ்வொருவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

ஏற்கனவே உடைந்து போயுள்ள பொருளாதாரத்தில் எதிர்கால சிற்பிகளை பலிக்கடாவாக்காமல் அவர்களுக்கான பாதைகளை அகலத்திறக்க வேண்டிய கனவான்களே சற்றுச் சிந்தித்து சிறந்த முடிவுகளை விரைவில் எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் பெற்றோர்களாகிய நாங்கள் கண்ணீருடன் காத்திருக்கின்றோம்!



# வாணனிடம் கேளுங்கள்
## கேள்வியும் பதில்களும்

சுதர்சன் நடராஜன்,
யாட் ரோட்,
கல்முனை

**கேள்வி :** அழகான பெண்களைக் கண்டால் உடனே மனதில் தோன்றுவது என்ன?




**பதில் :** அப்போதைய மனநிலையைப் பொறுத்தது அது. 'நல்ல கணவனை அடைந்து நலமாக, மகிழ்ச்சியாக இரு என்று மனம் நினைத்தால் நம் ஜீரண உறுப்புகள் சீராக வேலை செய்து கொண்டிருக்கின்றன' என்று அர்த்தம்.

'இதற்கொன்றும் குறைச்சல் இல்லை.உன்னிடம் ஒருத்தன் அகப்பட்டுக் கொண்டு என்ன பாடுபடப் போகிறானோ?' என்று குமுறினால் வீட்டில் நிலைமை சரியில்லை என்று அர்த்தம்.

பொருளாதார நெருக்கடி என்றால், உலகில் அழகு என்பதே தென்படாது. எல்லாமே அசிங்கம்தான்.

*****



சோபிதன் பாக்யராஜா,
பஸ் நிலையம்,
பொத்துவில்..

**கேள்வி :** கால இயந்திரம் அதாவது கடந்த காலத்தைக் கண்ணெதிரே கொண்டு வரும் சாதனம் இருந்தால்..?

**பதில் :** 1918 க்கு முன் கிழக்கு எப்படியிருந்ததென்று பார்த்து பெருமூச்சு விடலாம்.

*****

இளங்கோவன்,வைத்தியர் வீதி,பாண்டிருப்பு -01

**கேள்வி** : ஐ.எம்.எப் ஒப்பந்தம்...ஒப்பந்தம்... என்றார்கள் அதுவும் பாராளுமன்றத்திலையும் பாசாயிட்டதே...

என்ன சேர்..? நாட்டுக்கு காசு நிறைய கிடைக்குமா...??

**பதில் :** கிடைக்கும்...கிடைக்கும்...எல்லாமே கிடைக்கும். வாயில நல்லா வருது...!!!

இந்த ஒப்பந்தத்தில நமக்கு ஒன்றும் இல்லடா தம்பி. வாங்குன கடனை கட்டுறதுக்கு நாணய நிதியம் கொஞ்சம் சப்போர்ட் பண்ணுது. அவ்வளவுதான்.




அவன் போட்ட நிபந்தனை தானே இந்த வரி எல்லாம். என்ன விலை கொடுத்தாவது வெளிநாட்டு கடன கட்டி முடிக்க வேண்டும் என்பதில் நம்ம தலைவர் படு குஷியா நிக்கிறார்.

பார்லிமெண்டில் பாஸ் பண்ணினதெல்லாம் ஒரு பம்மாத்... தோல்வி அடைந்திருந்தால் கூட எதுவும் நடக்காது. ஏனென்றால் இரு தரப்பும் ஒப்பந்தம் செய்து முடித்து விட்டார்கள். பாராளுமன்றத்தில் நடந்ததெல்லாம் ஒரு சம்பிரதாயம் பாருங்க..

*****

முத்துலிங்கம் மதியழகன்,
கோயில் வீதி,
கல்முனை -3

**கேள்வி :** 'பொன்னியின் செல்வன்' கதையை மணிரத்தினம் கெடுத்து விட்டாரென்று ஆக்ரோஷிக்கிறார்களே?



**பதில் :** நாவலைப் படிக்காதவர்களும் இந்தப் படத்தின் மீது வசை பாடும் விசித்திரம் வேறெங்கே நிகழும். வாசிப்பு பழக்கம் அருகிப் போன இந்தத் தலைமுறையினரை நாவலின் பக்கமாக மணிரத்தினம் நகர்த்தியிருக்கிறார். அதற்காகவே அவருக்கோர் பூச்செண்டு.

*****

சரண்யா பாஸ்கரன்.
பூந்தோட்டம் வீதி,
வவுனியா.

**கேள்வி :** அதையும் இதையும் ஒரே நாளில் அனுஷ்டிக்கலாம் என்கிறாரே ரணில்?



**பதில் :** 'சமரசம் உலாவும் இடமே..' என்ற பாடலை இப்போதுதான் ரணில் கேட்டிருக்கிறார் போலும். அப்பாவிகளின் கண்ணீரும், பிசாசுகளின் கண்ணீரும் ஒன்றாமோ?

*****

அப்துல் காதர்,
பிரதான வீதி, சாய்ந்த மருது.

**கேள்வி :** அலி சப்றி தங்கத்துடன் பிடிபட்டு விட்டாரே?



**பதில் :** தங்க மகனுக்கு தண்டனை கிடைக்குமோ என்னவோ! ஆனால் அவரைப் பிடித்தவர்களுக்கு காலம் கடந்தேனும் அட்டமத்தில் சனி காத்திருக்கிறது. இது நம் நாடைய்யா, நம் நாடு.

*****

பெற்றிசியாஸ் லோக்கஸ்,
பெரியகல்லாறு -01, கல்லாறு.

**கேள்வி :** மீண்டும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் சூடு பிடித்துள்ளதே?



**பதில் :** முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது எவ்வளவு நாட்களுக்கு ?

*****

கலியுக வரதன்,
சாகாமம் வீதி, அக்கரைப்பற்று.

**கேள்வி :** தேரர்களும் மதகுருமாரும் திடீர் திடீரென கைது செய்யப்படுகிறார்களே ஏன்..?



**பதில் :** எல்லாமே ஒரு நடிப்புதான். உலகத்தில் இலங்கை தோல்வி அடைந்த நாடு. இனவாதம் மதவாதத்திற்கு எதிராக நாங்கள் செயல்படுகிறோம் என்பதை காட்டுவதற்கான பெரு முயற்சிகளில் ஒன்று...

மதங்களுக்கிடையில் முரண்பாட்டை தூண்டிய போதகர் ஜெரோம் நாட்டை விட்டு ஓடினார்.. ஏனைய மதங்களை தூசித்த தேரர், கைது செய்யப்பட்டு இருக்கிறார். இவையெல்லாம் வெளிநாடுகளை கவரும் வித்தைகள் என்பது உங்களுக்குப் புரியும் தானே...

*****



# கல்லூரிக்காலம்..



## வாழ்க்கையை மீட்டேன் ஒரு கனம்...!

✍ ஸோபிதன் சதானந்தம்

தரம் 1 இல் பிஞ்சு பாலகனாக தங்க மேனியாய் கல்வியை முன்னெடுக்க பாடசாலை நிருவாகமும் இரண்டாம் தர மாணவர்களும் பூமாலையுடன் நுழைவாயிலில் காத்துக்கொண்டு பாடசாலையில் பாண்டு வாத்தியங்கள் முழங்க அழைத்துச் சென்ற அழகிய நினைவுகள் கண் முன்னே ஊசலாடுக்கொண்டிருக்கின்றன.

புதிய ஏடுகளுடனும் பென்சிலுடனும் நான் காட்டிய சித்திர மழலை விளையாட்டுக்கள் நினைவாகின்றன. தாய்க்கு நிகராய் வகுப்பாசிரியர், தந்தைக்கு நிகராய் வித்தியாலய முதல்வர் விளங்குகிறார். சகோதர உறவுகளுடன்சின்னஞ்சிறு விளையாட்டுக்கள், கண்ணில் உதிக்கின்றன.

காலங்கள் படிப்படியாக ஓடிக் கொண்டிருக்க, மழை, வெயில் மாறி வருவது போல லீவு, பாடசாலை நடந்து கொண்டிருந்தன .

அதே போல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒரு பக்கம் மேலதிக வகுப்புக்கள், பி. ப 3. 00 மணி வரை வகுப்புக்கள் நிறைவுற்ற உடன் பாடசாலைக்கு எதிரே நிற்கும் புளிய மரங்களுடன் போட்ட சண்டைகள், ஒரு வருட கைதி வாழ்வு அது புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்ற வருடம் அது.

காலங்கள் மாற தரம் 6 - 9 வரை நண்பர்களுடன் கதிரை, மேசைத் தாக்குதல். அதே போல் தும்புத்தடி, ஈர்க்கில்தடி தாக்குதல், பெண்களின் கூந்தலை இழுத்து விடுதல், நண்பிகளின் உணவை அவர்களுக்கு தெரியாமல் எடுத்து சாப்பிடுவது, போன்ற கள்ள குறும்புக்கள்ள வேலைகள் தொடர, சிறு சிறு குற்றங்களுக்கு வகுப்பாசிரியரிடம், பிரதி அதிபர், அதிபர் போன்றவர்களிடம் வாங்கிய தண்டைனைகள் தற்போது கண்ணில் வடிகின்றன.

அதே போல் காலையில் ஒன்று கூடல் அனுபவம் வேறு தனி சுகம் தினமும் வரிசையாக சென்று அந்த ஒன்று கூடல் மண்டபத்தில் நின்றுகொண்ட தேவாரம், நற்சிந்தனை, அதிபர், ஆசிரியர்களின் அறிவுரை கேட்டுக்கொண்டு பாடசாலைக் கீதம், தேசிய கீதம் போன்றவற்றிக்கு அமைதியாக நிற்க வேண்டும் என்று உயர் தர மாணவ தலைவர் சகோதரங்கள் கூறும் வார்த்தைகள் செவிகளில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன. அதே போல் உடற்பயிற்சியின் போது நாங்கள் செய்யும் குறும்பு வேலைகளுக்கு ஆசிரியர்கள் தரும் சிறு தண்டனைகள் மற்றும் கண்முன்னே உதிக்கின்றன, வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு சிவபுராணம் பாடும் முறை, பிரசாதம் வாங்க அடிபுடி சண்டை நாங்கள் படுகின்ற துன்பம்.

அதே போல் இல்ல விளையாட்டுப் போட்டிகள், கல்விச்சுற்றுலாக்கள், பரிசளிப்பு விழாக்கள், வாணி விழா, மாணவர் மன்றம், ஆலயங்களுக்கான சிரமதானம், கண்காட்சி நிகழ்வுகள், தமிழ்த்தினம், ஆங்கில தின போட்டிகள், கோட்ட, வலய, மாகாண போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள், கல்லூரி பாண்டு வாத்திய குழுவில் இணையும் சந்தர்பம், சாரணியம், சுகாதார கழகம், விஞ்ஞான ஆய்வுகள், கள விஜயம் போன்ற பல சுவாரஸ்யமான பல கதைகள் கல்லூரி வாழ்க்கைக்கு புத்துணர்ச்சி ஊட்டின . அதனை பற்றி வர்ணிக்க தொடங்கினால் இந்த ஆக்கத்தை நான் நிறைவு செய்ய முடியாது.

காலங்கள் ஓட தரம் 10 ற்கு ரவுசர் அணிந்து பாடசாலைக்கு வர அதனை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம், என பல திருவிளையாடல் லீலைகள், க. பொ. த சாதாரண தரம் அதில் ஒரு கவலை, ஒரு சந்தோசம் இருக்கும் நண்பர்கள் ஒவ்வொரு துறைக்கும் பிரியும் இது முடிந்தால் ஏதோ பல்கலைச்சென்றவர்களை போல் ஒரு எண்ணம் உதிக்கும் அழகிய தருணம். இதில் தொடர்ந்து பாடசாலையில் தொடரும் மேலதிக வகுப்புக்கள், இரவு வகுப்புக்கள், பிற்பகல் வகுப்புக்களுக்கு நேரத்திற்கு முதல் வந்து ஆண், பெண் இருபலாரும் விளையாடும் பிள்ளையார் கட்டை, எறி பந்து, தூத்தி, ஐஸ்பழம் போன்ற சிறு கிராமிய விளையாட்டுக்கள் என் வாழ்வில் நீங்காத நெஞ்சலைகளாக ஆழப்பதிந்துள்ளன . இது திரும்பி வரும் என்றால் நான் மீண்டும் பாடசாலை வாழ்க்கையில் இணைய முடியுமா என்னும் ஓர் எண்ணம். இதற்கிடையில் பயங்கரவாத பிரச்சினை, கொரோணாவின் கோர தாண்டவம் போன்றவற்றினால் பாடசாலை விடுமுறை, பரீட்சைகள் தாமதம், எங்களுக்கு புது அனுபவத்தை தந்தது ஊரடங்கு போன்ற நீங்கா நினைவுகள் கல்லூரி வாழ்க்கையில் உள்ளன. மேலும் காலைச்சுத்தம், வகுப்பறைச் சுத்தம் போன்ற பாடசாலைக் கடமைகளில் தரம் 11 ல் புது அனுபவம். கல்லூரியாள் கலைவாணியின் தினமும் ஆராதனை, பூ வைக்கும் முறைகள் நீங்கா நினைவுகள் .

காலங்கள் படிப்படியாக மாற க. பொ. த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி வெற்றிகரமாக எதிர்கொண்டு சில நண்பர்கள் அவர்களின் தொகுதி பாடத்துறைக்கு ஏற்ப ஏனைய பாடசாலைகளும், ஓர் சிலர் பாடசாலையை விட்ட நினைவுகளும் உள்ளன.

ஏதோ ஓர் நான் செய்த புண்ணியம் 13 ஆண்டுகளும் அதே பாடசாலையில் கல்வி கற்ற சுகம். உயர் தரம் என்ற உடனே மாணவ தலைவர்கள் என்ற ஓர் கர்வ எண்ணம். பாடாசாலை முடியும் தறுவாயில் என்பதனாலோ தெரியவில்லை.

என் பாடசாலை என்ற கர்வம். உயர் தரத்திற்கு இணைந்து ஓர் 3 மாதங்களுக்குள் மாணவ தலைவர் எனும் உரிமை நாமம், நமது தலைமையில் மாணவ மன்றம், விளையாட்டுப்போட்டி, பாண்டு வாத்திய குழு, ஆசிரியர் தினம், வாணி விழா, பரீசளிப்பு விழா, கல்விச்சுற்றுலாக்கள், பாடசாலை சிரமதானங்கள், இணைப்பான விதான செயற்பாடுகள் போன்ற பல்வேறு விதமான அற்புத நிகழ்வுகளை தலைமை தாங்கி நடாத்துவது பெருமை. இப்படிப்பட்ட பாடசாலை நிகழ்வுகளுடன் நீங்காத நினைவுகளை கண்முன் நின்று கொண்டிருக்கின்றன. இந்த அனுபவம் எனக்கு மட்டுமன்றி இவ்வுலகில் கல்வி கற்ற அனைவருக்கும் இவ்வாறான அனுபவங்கள் புதுமையே. இக்கல்லூரிக் காலம் அரும்பெரும் பொக்கிச தங்கக்காலம்.





# யோக ஆசனங்களின் மகிமை

# திரிகோணாசனம்



கலாபூசணம்
யோகாசன கலாநிதி கா.சந்திரலிங்கம்

நாங்கள் தொடர்ச்சியாக யோகாசனம் பற்றி பார்த்து வருகின்றோம். அந்த வகையில், இப்பதிவில் இலகுவாக செய்யக்கூடிய,உடல் நலம் தரக்கூடிய இடுப்புக்கு பயிற்சி அளிக்கக்கூடிய ஆசனமான திரிகோணாசனம் பற்றி பார்ப்போம்.

### திரிகோணாசனம்:

(முக்கோண அமைப்பு) திரிகோணம் என்பது மூன்று கோணங்களை குறிக்கின்றது. இவ்வாசனம் மூன்று கோணங்கள் போன்று காணப்படுவதால் இப்பெயர் பெற்றுள்ளது

### செய்யும் முறை:

❊ கால்கள் இரண்டையும் ஒருமித்து வைத்து கைகளை சாதாரணமாக பக்கவாட்டில் தொங்கவிட்டு உடலை தளத்தியபடி நிற்கவும்.

❊ வலது காலை சாதாரணமாக வலது பக்கம் ஒரு மீற்றர் தள்ளி வைக்கவும். (உயரம் குறைந்தவர்கள் தங்கள் உயரத்துக்கு ஐந்தில் மூன்று பங்கு இருக்கக்கூடியதாக கால்களை வைக்கவும்)

❊ இப்பொழுது மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு இரண்டு கைகளையும் தோள் அளவுக்கு நேராக உயர்த்தி பக்கவாட்டில் கொண்டு வரவும். கைகள் இரண்டும் மடியாமல் நேராக நீட்டப்பட்ட நிலையில் இருக்கும்.

❊ மூச்சை மெதுவாக வெளிவிட்டுக் கொண்டடே உடலை வலது பக்கம் பக்கவாட்டில் சரித்து தரையை நோக்கி கொண்டு வரவும்.

❊ வலது கைவிரல்கள் கணுக்கால்களை தொட்டபடி இருக்கலாம். தரையைத் தொட முடிந்தால் தரையை தொட்டபடி இருக்கலாம்.

❊ நன்றாக வளையக்கூடியவர்கள் உள்ளங்கை களால் தரையைத் தொடலாம். இடது கை நேர் கோட்டில் மேல் நோக்கி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

❊ உள்ளங்கைகள் முன்புறம் பார்த்தபடி இருக்கும்.

❊ இடது கைகளின் விரல்களில் உங்கள் பார்வை நிலைக்கட்டும்.

❊ மூச்சை மெதுவாக சுவாசிக்கவும். முடிந்த அளவு இந்நிலையில் நிற்கவும். சுமார் ஒரு நிமிடம் இருந்தாலே போதுமானது.

❊ மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே தோள்களுக்கு நேராக கைகளை கொண்டு வரவும்.

❊ மூச்சை வெளி விட்டுக் கொண்டே ஆரம்ப நிலைக்கு வரவும்.

இதே போன்று மறுபக்கமும் செய்யவும். கட்டாயமாக இரண்டு பக்கம் செய்ய வேண்டும்.

### பலன்கள்:

» இடுப்பு தசைகள், முழங்கால் தசைகள், தொடை தசைகள் கெண்டைக்கால் தசைகள் உறுதிப்படுத் தப்படுகின்றன.


» தட்டைப் பாதம் இல்லாமல் போகின்றது.

» முதுகு வலியை இல்லாமல் செய்து முதுகுப்பகுதியை வலுப்படுத்துகின்றது.

» தேவையற்ற கொழுப்பை கரைக்கின்றது.

» மார்புப் பகுதியை விரிவடையச் செய்கின்றது

# பரிவிர்த திரிகோணாசனம்



### பரிவிர்த திரிகோணாசனம்:

(முறுக்கிய நிலையில் உள்ள ஆசனம்)

தற்போதய காலகட்டத்தில் பெரும்பாலனவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு பல மருந்துகளையும் உட்கொள்வதுடன் சிறுநீரக சுத்திகரிப்பு செய்து கொண்டிருப்பதையும் நாம் காண்கின்றோம். சிலர் மரணத்தை தழுவுவதும் உண்டு. சிறுநீரகம் பழுதடைந்து அதனுடைய இயக்கம் குறைவடைவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. நாம் உண்ணும் உணவுகளில் உள்ள நச்சுத்தன்மை, அருந்தும் நீரில் உள்ள ரசாயன பொருட்கள், நீரழிவு நோயை கட்டுப்படுத்த முடியாத நிலை,நோய் தீருவதற்காக எடுக்கப்பட்ட மருந்துகளின் தாக்கம், உடலுக்கு தேவையான அளவு தண்ணீர் குடியாமை போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

எது எவ்வாறு இருப்பினும் இவ்வாசனத்தை நாம் தொடர்ந்து செய்து வந்தால் இதிலிருந்து நாம் நிவாரணம் பெறலாம்.

### செய்முறை:

❊ ஆரம்பத்தில் திரிகோண ஆசனம் செய்வதற்கு நிற்பது போல் கால்கள் இரண்டையும் ஒருமித்து வைத்து கை களை சாதாரணமாக பக்கவாட்டில் தொங்கவிட்டு உடலை தளத்தியபடி நிற்கவும்.

❊ வலது காலை சாதாரணமாக வலது பக்கம் ஒரு மீற்றர் தள்ளி வைக்கவும். (உயரம் குறைந்தவர்கள் தங்கள் உயரத்துக்கு ஐந்தில் மூன்று பங்கு இருக்கக்கூடியதாக கால்களை வைக்கவும். )

❊ இப்பொழுது மூச்சை உள்ளிமுத்துக் கொண்டு இரண்டு கைகளையும் தோள் அளவுக்கு நேராக உயர்த்தி பக்கவாட்டில் கொண்டு வரவும். கைகள் இரண்டும் மடியாமல் நேராக நீட்டப்பட்ட நிலையில் இருக்கும்.

❊ மூச்சை மெதுவாக வெளிவிட்டுக் கொண்டடே உடலை இடது பக்கம் சரித்து தரையை நோக்கி கொண்டு வரவும்.

❊ இப்போது உடல் நன்றாக முறுக்கப்பட்டு வலது கை இடது காலின் பாதங்களை தொட முயற்சிக்கவும். வலது கைவிரல்கள் இடது கணுக்கால்களை தொட்டபடி இருக்கலாம். தரையைத் தொட முடிந்தால் தரையை தொட்டபடி இருக்கலாம்.

❊ நன்றாக வளையக்கூடியவர்கள் உள்ளங்கைகளால் தரையைத் தொடலாம். இடது கை மேல் நோக்கி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். உள்ளங்கைகள் முன்புறம் பார்த்தபடி இருக்கும்.

❊ இடது கைகளின் விரல்களில் உங்கள் பார்வை நிலைக்கட்டும்.

❊ உடலை நன்கு முறுக்கி திருப்பவும்.

❊ மூச்சை மெதுவாக சுவாசிக்கவும்.முடிந்த அளவு இந்நிலையில் நிற்கவும்.சுமார் ஒரு நிமிடம் இருந்தாலே போதுமானது.

❊ மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே தோள்களுக்கு நேராக கைகளை கொண்டு வரவும்.

❊ மூச்சை வெளி விட்டுக் கொண்டே ஆரம்ப நிலைக்கு வரவும்.

❊ இதே போன்று மறுபக்கமும் செய்யவும். கட்டாயமாக இரண்டு பக்கம் செய்ய வேண்டும்.

### பலன்கள்:

இடுப்பு தசைகள், முழங்கால் தசைகள், தொடை தசைகள் கெண்டைக்கால் தசைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. தட்டைப் பாதம் இல்லாமல் போகின்றது. முதுகு வலியை இல்லாமல் செய்து முதுகுப் பகுதியை வலுப்படுத்துகின்றது. தேவையற்ற கொழுப்பை கரைக்கின்றது. மார்புப் பகுதியை விரிவடையச் செய்கின்றது. முக்கியமாக சிறுநீரகத்தின் செயல்பாடு சீரான முறையில் நடைபெறும். சிறுநீரக நோய் வராமல் தடுக்கும். சிறுநீரக நோயிலிருந்து எங்களை பாதுகாக்க சிறந்த ஒரு ஆசனம்.

எந்த ஒரு ஆசனம் செய்யும் பொழுதும் அதனுடைய பலன்களை மனதில் கொண்டு செயல்படுகின்ற பொழுது கூடிய அளவு பலன் கிடைக்கும் குறிப்பாகஇவ்வாசனத்தைசெய்யும்பொழுதுஎங்களுடைய மனத்தை முழுமையாக சிறுநீரகத்தில் செலுத்தி சிறுநீரகம் நன்கு செயல்படுகின்றது என்று பலமுறை எண்ணவும். நிச்சயம் முழுமையான பலனை பெறலாம்.



# இது உங்கள் பிள்ளைகளின் எதிர்கால மோதல்..

மங்கையர் மகுட்டம்
ஜெனிதா மோகன்

✍ பாத்திமா நலீபா
உளவியல் எழுத்தாளர்

**அன்பான பெற்றோர்களே!**

- **உங்கள் பிள்ளைகளின் வாயைப் பாருங்கள்.**
- **உங்களுக்குத் தெரியாமல் வெளியிடங்களில் அவர்கள் பாவிப்பதை நன்கு திட்டமிட்டு அவதானியுங்கள்.**
- **நண்பர்களுடன் எங்கு எங்கு திரிகின்றார்கள்? யார் அவர்களது நண்பர்கள்? என்பவற்றை கட்டாயம் அவதானியுங்கள்.**
- **பெற்றார்களே உங்க மகனுடைய படுக்கை அறைகளை சுத்தம் செய்து பாருங்கள்.**
- **வழமைக்கு மாறான ஏதாவது மாற்றம் தெரிந்தால் நிச்சயமாக அவதானியுங்கள்.**
- **புதிய நபர்களுடன் நட்பு கொள்கின்றார்களா? என்பதை கவனியுங்கள்.**
- **இரவு நேரத்தில் படுக்கை அறைகளை நோட்ட மிடுங்கள்.**

தற்பொழுது உள்ள நிலைமையில் ஊரிலுள்ள பாடசாலை மாணவர்களுள் உயர்தரம் முதல் கீழ் வகுப்பு மாணவர்களை சற்று நிதானமாக அவர்களுள் எத்தனை பேர் தூள் பாவிப்பார்கள் என்று பாருங்கள்.

முக்கியமாக பாடசாலை தொடர முடியாத, அதாவது கடைகளில் வேலை செய்கின்றவர்களை கட்டாயம் அவதானியுங்கள். அவர்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று. இவ்வாறான நிலைமை இனிமேலும் தொடரக் கூடாது என்பது எனது கருத்தாகும்.



அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கா விட்டால் எமது கிராமம் பாரிய சமூக சீரழிவுக்கு செல்லலாம் என்பதற்கு எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே, உங்களது பிள்ளைகள் தொடர்பாக அனைத்து விடயங்களிலும் நீங்கள் கட்டாயம் கண்காணியுங்கள். அவ்வாறு அவர்களது தவறுகளை அவர்களுக்கு சுட்டிக் காட்டுங்கள்.

அண்மைக்கால ஆய்வின் படி,

❄ **2022 ஆம் ஆண்டில் 70%** உம்

❄ **2023 ஆம் ஆண்டில் 99%** ஆகவும்

தூள் பாவனை அதிகரித்துள்ளது.

### இதற்கு காரணம் என்ன?

» **பெற்றோர்களின் கவனயீனமா?**

» **வியாபாரத்திற்காக இளைஞர்களின் வாழ்வை சூறையாடும் அரக்கனின் சுயநலமா?**

சிலர் இதனை கண்டித்தும் பலர் கண்டும் காணாதது போல் தமது வாழ்க்கையை கடத்தி வருகின்றனர். இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் அதிகமான பாடசாலை மாணவர்கள் தூள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்பதே. வீடுகளிலும், கடைத் தெருக்களிலும், மூளை முடுக்குகளிலும் பல மனித விசகிருமிகளினால் பாடசாலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கல்வி கற்க சென்ற பல மாணவர்கள் தூள் வாயில் அடித்த வண்ணம் வீடு திரும்புகின்றனர். இப்படியே போனால் நாட்டை கட்டிக் காக்க வேண்டிய எதிர் கால கல்விமான்கள் உருவாக மாட்டார்கள், நாட்டை வீழ்த்தும் போதைமான்களே உருவாக்குவார்கள் என்பதில் ஐயமில்லை.



பல நேரத்தில் பலரது மனதிலும் எழுகின்ற ஒரு வினா ஏன் மக்கள் இந்த தூளை அதிகம் அதிகம் பாவனை செய்கிறார்கள்? இவ்வாறான வினா எம் மனதில் தோன்றினால் அது குறித்து எமக்கு எழும் பதில் விசத்தை குடித்தால் உயிர் போகும் என்று தெரிந்து தெரிந்து அதனை செய்வது முட்டாள்.

### சற்று சிந்தியுங்கள்

வீடுகளில் தூள் வியாபாரம் செய்வோர் உங்களுக்கு தூளை வியாபாரம் செய்யும் நபர் ஏன் அவர்களின் வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு இதனை கொடுப்பதில்லை?

நீங்கள் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் போது ஏன் அதனை அவர்களின் பிள்ளைகளின் பார்வையில் இருந்து அகற்றுகிறார்கள்?



### அவனது சுய நலத்துக்காக உன்னை காவு கொடுத்து விடாதே. . . . !

தூள் பாவனை செய்யும் பலர் கூறுவதானது, தூள் வாயில் வைத்தால், ஒரு சுதந்திர உணர்வை ஏற்படுகின்றது. உடலிற்கு அதிக சக்தி கிடைக்கிறது. களைப்பை நீக்குகிறது என இதற்கு அடிமையான பல மூடர்கள் சொல்லிக் கொண்டு திரிகின்றனர்.

ஆனால், உண்மையில் இப்பழக்கம் அவர்களது உடலாரோக்கியத்தை கறையான்கள் மரக்கட்டைகளை அரிப்பது போல் அரித்துக் கொண்டிருப்பதை அவர்கள் அறியவில்லை. இதன்பாவனைமனிதனின்மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பாதித்து ஒட்டுமொத்தமாக மனிதனின் உடல் நலத்தை சீர்குலைக்கின்றது.

அதுமட்டுமன்றி மது அருந்துவதினால் கல்லீரல் பாதிக்கப்பட்டு கல்லீரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. உணவுக்குழாய், வாய், தொண்டைகளில் புற்றுநோய் ஏற்படுகிறது. மது அருந்துபவர்களது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியானது குறைவடைகின்றது.

### எனவே பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை பாதுகாக்க உங்களால் மட்டுமே முடியும்.

தற்போது வீடுகளிலே இவ்வாறான வியாபாரம் அதிகமாக நடைபெற்று வருகிறது.

உங்கள் பிரதேசங்களில் இவ்வாறான விற்பனை செய்யும் இடங்கள் குறித்த தகவல்கள் கிடைத்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பெற்றோர்களே இது உங்கள் பிள்ளைகளின் எதிர்கால மோதல்.**

இளம் கலைஞர் அறிமுகம்
 கு. கிலசன்

# மையுதிர்க்கும் மறுஜென்மம் ஊடாக மிளிரும் கவிஞர் அஜி அஜந்தன்




இயற்கைச் சிறப்புறு நிலங்களையும் அழகான குளங்களையும் கொண்டு வனப்புடன் திகழும் வன்னியின் வவுனியா மாவட்டத்தில் மருக்காரம்பளை எனும் கிராமத்தில் வாழ்ந்து வரும் அஜி அஜந்தன் எனும் புனைபெயரைக் கொண்ட விக்கினேஸ்வரன் அஜந்தன் அவர்கள் விக்கினேஸ்வரன் ஸ்ரீசுபகாந்தா தம்பதியினரின் இரட்டை புதல்வர்களில் ஒருவராவார்.

இவர் ஐந்தாம் தரம் வரையிலான ஆரம்பக் கல்வியினை வ/புளியங்குளம் இந்துக் கல்லூரியில் கற்று அதன் பின்னர் உயர் தரம் வரையிலான கல்வியை வ/புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் சிறந்த முறையில் கற்று உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்று கிழக்குப் பல்கலைகழகத்தின் கலைப் பீடத்திற்கு தெரிவாகி தற்போது இளங்கலைமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கவிஞர் அஜி அஜந்தன் தன்னுடைய சிறு வயது முதல் இயற்கையை இரசிப்பவராகவும் கற்பனையாற்றல் கைவரப்பெற்றவராகவும் கவிதைகள் வாசிப்பதிலும் புத்தகங்களுடன் அதிக நேரத்தைச் செலவிடுபவராகவும் தமிழ் மீது அதீத காதலுடையவராகவும் காணப்பட்டார். பாடசாலைக் காலங்களில் தன் கற்பனை வளத்தினால் பல கவிதைகளைப் படைக்கும் சிறந்த ஓர் படைப்பாளியாகவும் தமிழ்த்தினப்போட்டிகள் மற்றும் கலை இலக்கியப் போட்டிகளில் கவிதைத்துறையில் வெற்றியீட்டி சான்றிதழ்களைப் பெறுபவராகவும் திகழ்ந்தார்.

இவர் சிறு வயது முதல் பல்வேறு கவிதைகளை எழுதியிருந்தாலும் தனது பதினைந்தாவது வயதில் பாடசாலையின் முகிழ் சஞ்சிகைக்கு ''சமாதானமே எங்கள் எண்ணம்'' என்ற தலைப்பில் எழுதிய கவிதை முதன் முதலில் அச்சுப்பதிப்புப்பெற்றதெனலாம். அதன் பின்னர் 2015 ம் ஆண்டுகளிலிருந்து மெட்ரோ, தினகரன், வானவில், மித்திரன், உதயசூரியன், தீபம், தினப்புயல், புதுவிதி எனப் பல பத்திரிகைகளிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் இவருடைய கவிதைப்படைப்புக்கள் வெளிவரத் தொடங்கியது.




பத்திரிகை சஞ்சிகை என்பதோடு மட்டும் நின்று விடாமல் இவருடைய கவிதை தென்றல் வானொலியில் ''பூங்காற்று'' நிகழ்ச்சியிலும் இரண்டு வருடங்களுக்கு மேலாக இவரது கவிதைகள் ஒலிபரப்பாகியது.

2023 ம் ஆண்டில் தனது விடாமுயற்சியினாலும் பல தடைகளையும் தாண்டி தன்னுடைய முதலாவது கவிதைத்தொகுப்பாக ''மையுதிர்க்கும் மறுஜென்மம்'' என்ற கன்னிக் கவிதை நூலை வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஊடாக வெளியீடு செய்தார். கவிஞர் அஜி அஜந்தனினுடைய கவிதைகள் கனகாத்திரமானவை மனிதவாழ்வின் அன்றாட நிகழ்வுகளினையும் சமூகத்தினுடைய அவலங்களையும் தனிமனிதப்பிரச்சினைகளையும் போர்க்காலச் சூழலின் வடுக்களையும் இயற்கையின் வனப்புக்களையும் பாடுபொருளாகக் கொண்ட எளிமையான மொழிநடையிலமைந்தவை.

அஜந்தனின் கவிதைப் படைப்புக்கள் வாசிக்கும் ஒரு வாசகனினுடன் இதயம் திறந்து பேசுகின்றது.

உள்ளத்துக்குள் ஆழமாய் ஊடுருவிப் பல நினைவுகளை படம்பிடித்துக் காட்டுகின்றது.

சமூகத்தின் பல்வேறு அவலங்களை பல கோணங்களில் நின்று பேசுகின்றது இயற்கையோடு கொஞ்சிக் குலாவி கன்னத்தில் முத்தமிட்டுச் செல்கின்றது. இவரின் முதல் படைப்பான மையுதிர்க்கும் மறுஜென்மம் நாற்பத்தியொரு கவிதைகளைக் கொண்டது. இதில் வரும் அதிகளவான கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தனவாகக் காணப்படுகின்றது.

கவிஞர் கவிதைகளோடு மட்டும் நின்று விடாமல் மிகச்சிறந்த கவியரங்கப் பேச்சாளராக இந்தியாவில் இயங்கும் பல தமிழ்க்குழுமங்களில் கவியரங்கங்களில் பங்குபற்றி பாராட்டுக்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார் மேலும் சர்வம் வானொலியில் ஒரு வருடங்களாக ''இராகம் தேடும் பல்லவி'' எனும் கவிதை நிகழ்சியை தொகுத்து வழங்கும் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் பணியாற்றினார்.

தன்னுடைய கலைப்பயணத்தில் பல தடைகளையும் சவால்களும் முட்களாய் நிறைந்து பரந்து காணப்பட்டாலும் அவற்றையெல்லாம் ஒரு சிறிய புன்னகையில் தகர்த்து மனம் தளராமல் தன்னுடைய கலைப்பயணத்தை தொடர்ந்து வருகின்றார்.

இவருக்கு இதுவரையில் கவிதைத்துறையில் கிடைத்த அங்கிகாரம் எனும் போது 2017 ம் ஆண்டு கவின்கலை விருதும், பாவேந்தர் விருதும், தமிழ்ப்பணிச்செம்மல் விருதும், 2022 இல் நட்சத்திர ஒளிச்செம்மல் விருதும், தர்ம சக்கரா கொடி மணி இணையத்தள விருதும், 2023 இல் திறமைக்கான தேடலாக கலைச்சுடர் விருதும், காளமேகப்புலவர் விருதும், கவிச்சூரியன் விருதும், புரட்சிக் கவிஞர் விருதும் இவருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. தொடர் படைப்புக்களை வெளியிடும் அவாவோடு பயணிக்கும் கவிஞர் அஜி அஜந்தனின் கனவுகள் நனவாக எமது நல்வாழ்த்துகள்.



# உச்சி வெயிலின் உஷ்ணத்தைச் சமாளிப்பது எப்படி?

✍ வைத்தியர் ஜலீலா முஸம்மில்.
வைத்திய அதிகாரி,
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.

தற்காலத்தில் அனைவரும் எதிர்நோக்கியுள்ள ஒரு பாரிய பிரச்சினையாக கோடை வெயிலின் கொடூரத்தைக் குறிப்பிடலாம். வழமைக்கு மாற்றமாக சூழலில் கடும் வெப்பநிலை மக்களை வாட்டி வதைத்து கொண்டிருக்கிறது. ஆடைகள் நனைந்து வியர்வையில் குளித்துக் கொண்டிருக்கிறோம். அனல் காற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சிறு குழந்தைகள்முதல் பெரியோர்வரை அதிக வெக்கை காரணமாக மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பகல் வேளைகளில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத அளவிற்கு வெயிலும், இரவு வீட்டுக்குள் இருக்கவே முடியாத அளவிற்கு புழுக்கமும் மக்களை வாட்டுகிறது.

இந்த வேளையில் அம்மை, கண் வருத்தம், உடலில் நீரிழப்பு, உடலில் சூட்டு கொப்புளங்கள், வியர்க்குரு, சிறுநீர்த் தொற்று, பொடுகுத் தொல்லை, வலிகளுடன் கூடிய முகப்பரு, அதிகமான கண் எரிச்சல், தூக்கமின்மை, உடல் எரிச்சல், வாய்ப்புண் வருதல், அரிப்பு, தேமல், சிறுநீரகக் கற்கள் போன்ற உபாதைகளால் அவஸ்தைக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலைமையைச் சமாளித்து வாழ்க்கையை சுமுகமாக மாற்றி அமைக்க எவ்வாறான எளிய வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பற்றிப் பார்க்கலாம். இயற்கையின் தாக்கத்தில் இருந்து நம்மை நாமே தற்காத்து கொள்வது சாலச்சிறந்தது.

எமது உடல் சுமார் 75 வீதம் நீர்த் தன்மையால் ஆக் கப்பட்டுள்ளது. நீரை உட்கொள்ளாவிட்டால் நாம் உயிர் வாழ்வது கடினம்.மனித உடலின் சராசரி வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ் (36.1–37.0) ஆகும்.

சுற்றுப்புற வெப்பநிலை சராசரி வெப்பநிலையைவிட அதிகமாகும்போது வியர்வை, தோலுக்கு அதிக ரத்த ஓட்டம் செல்லுதல் ஆகியவற்றின் மூலம் அதிகப்படியான வெப்பம் வெளியேறி உடல் சராசரி வெப்பநிலையை அடைகிறது.

கோடை வெயிலால் அதிக வியர்வை வெளியேறும்போது உப்புச் சத்துப் பற்றாக்குறையும் நீர்ச்சத்துப் பற்றாக்குறையும் ஏற்படுகின்றன. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல் சோர்வு, தலைச்சுற்றல், தசைப்பிடிப்பு, குறைந்த அளவு சிறுநீர், செறிவான கடும் மஞ்சள் நிற சிறுநீர் வெளியேற்றம், மயக்கம், வலிப்பு போன்றவை ஏற்படலாம்.

கோடைகாலங்களில் ஏற்படும் நீரிழப்பானது (De-hydration) இலகுவாக குணமடையச் செய்யக்கூடிய ஒரு விடயம். ஆனால் அதைத் தீர்க்காது போய்விடின் உயிரிழப்புக் கூட சம்பவிக்கலாம்.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் கூடுதல் கவனம் எடுத்து உடம்பில் நீர்த்தன்மையை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. போதுமான அளவு குளிர்ந்த நீரை அருந்துங்கள். சூடான நீராகாரங்களை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. நீரின் அளவு குறைவதைத் தவிர்க்க தினமும் 4 முதல் 5 லிட்டர் சுத்தமான குடிநீர் குடிக்க வேண்டும்.

2. கோடைகாலங்களில் பரவலாக விற்கப்படும் நீர்ச்சத்து மிக்க பழங்களை அடிக்கடி சாப்பிடுதல்.

3. உதாரணமாக வத்தகைப் பழம், வெள்ளரிப்பழம், நுங்கு, இளநீர், இயற்கையான பானங்கள் போன்றன.

4. மக்கள் அதிக நேரம் வெயிலில் சுற்றுவதைத் தவிர்த்தல் நல்லது. நண்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரையிலான காலத்தில் கடும் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்ப்பது மிக அவசியமாகும்.

5. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து பருத்தியில் (கொட்டன்) நெய்யப்பட்ட உடைகளை தளர்வாக அணியுங்கள். அடர் நிறங்களை தவிர்த்து மெல்லிய நிறங்கள் உள்ள ஆடைகள் அணிவது சிறந்தது.

6. வெயிலில் வெளியே செல்பவர்கள் முகம், கை, கழுத்து போன்ற பகுதிகளில் கிரீம்(வெயில் பாதுகாப்புக்கான கிரீம்) பூசிவிட்டு வெளியே செ ல்லுங்கள். தொப்பி, கூலிங்கிளாஸ் அணிவதும் நல்லது.

7. தினமும் இரண்டு - மூன்று முறை தூய்மையான நீரில் குளிக்கவும்.

8. வீட்டு வாசல்களை, ஜன்னல்களைத் திறந்து வைத்து காற்றோட்டமான சூழலை ஏற்படுத்துங்கள்.

9. ஏ.சி. அறையில் அதிக நேரம் இருப்பவர்கள் காலை அல்லது மாலை வேளைகளில் வெயில் இல்லாத நேரத்தில் அரை மணிநேரம் நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

10. அதிக உடல் உழைப்பு அதிக உடற்பயிற்சி போன்றவற்றை கோடை காலத்தில் தவிர்த்துக் கொள்வது நல்லது.

11. மதுபானம் அருந்துவதை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது இது உடலில் இருந்து நீர் இழப்பை அதிகரிக்கச் செய்து பக்கவாத நிலைமையை உருவாக் கக்கூடும்.

12. வெப்ப அலையின் தாக்கத்தால் ஏற்படும் தலைச்சு ற்றல், வாந்தி, குமட்டல், உடல் சோர்வு, பலவீனம், மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடிவயிற்றில் வலி ஏற்பட்டால் அவற்றை அலட்சியப்படுத்தாமல் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். இவை யாவும் உடலின் நீரிழப்பிற்கான எச்சரிக்கை அறிகுறிகள் ஆகும்.

13. மொட்டை மாடி கொன்கிரீட் தளங்கள் போன்றவற்றில் அதிக நேரத்தை வெயில் காலத்தில் செலவிட வேண்டாம். ஏனெனில் இவை சூரிய வெப்பத்தை அதிகம் பிரதிபலித்து உடம்பிலிருந்து நீரிழப்பை அதிகளவில் ஏற்படுத்தி விட கூடும்.

14. வெயில் படக்கூடிய இடத்தில் காணப்படும் உலோகப் பொருட்களை கைகளால் தொட வேண்டாம். அவை அதிக வெப்பமடைந்து தீக்காயங்களை ஏற்படுத்தும் அபாயநிலை ஏற்படும்

15. கொழுப்பு அதிகம் உள்ள உணவுகள் இலகுவாக செரிமானம் ஆகாத உணவுகளை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது.

இதுபோன்று தற்காப்பு முறைகளைக் கடைப்பிடித்து இந்த கோடை வெயிலின் உக்கிரத்திலிருந்து சிறிது நிவாரணம் பெறுவோம்.

# கத்தாரில் சிறப்பாக இடம்பெற்ற 'எழுமின்' அமைப்பின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா!



## எழுமின்

**தலைநிமிர் காலம்**

**கத்தார்**

**வளைகுடா நாடான கத்தார் நாட்டில் எழுமின் அமைப்பின் ஐந்தாம் ஆண்டு மற்றும் விரிவாக்க விழாவும் 2023 - 2025 ஆம் ஆண்டு நிர்வாகிகள் அறிமுக நிகழ்வும் கடந்த 06. 05. 2023 சனிக்கிழமையன்று வெகு சிறப்பாக நடைபெற்றன.**

வளைகூடா எழுமின் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்*Mr. Alfred Berkmans* தலைமை தாங்கிய இவ்விழாவில் தமிழகத்திலுள்ள சேது தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் நிறுவனர் *Mr. Mohamed Jaleel*மற்றும் *Mr. Hassan Abdulaziz Al Obaidly, Mr. Ali Mohamed Hussain Paydar, Mr. Abdulla Ali Alkhelaifi* மற்றும் *Mr. Torsten Sperr, Mr. Astrid Auerbacher* என கத்தார், துபாய், ஜெர்மன் நாடுகளில் இருந்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





நிகழ்வின் துவக்கத்தில் பொதுச் செயலாளர் திரு. மகேஷ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விழா பற்றிய விளக்கம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பாக விளக்கவுரை நிகழ்த்தினார்.

*Mr. S. Mohamed jaleel, Mr. Torsten Sperr, Mr. Alfred Berkmans, Mrs. Pramela kannan, Mrs Rangamani Ravi* ஆகியோர் நிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

அதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து *Mrs Harini Mahesh, miss. Rakshana Mahadevan, Miss. Deshna Prathap, Miss. Hannah Claire Sahaya Praveen* ஆகியோரால் பாடப்பட்டது. திருக்குறளை திரு.குகன் துளிசிராம் காதுக்கு இனிமையாக வழங்கினார்.

எழுமின் அமைப்பின் நிறுவனர் *Rev. Dr. Jegath Gaspar Raj* அவர்கள் காணொளியின் மூலமாக எழுமின் அமைப்பு எவ்வாறு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது தொடர்பாகவும் அமைப்பின் குறிக்கோள் தொடர்பாகவும் விபரித்தார்.

வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் கத்தார் எழுமின் தலைவர் திரு. சக்திவேல் மகாலிங்கம் வரவேற்று எழுமின் அமைப்பின் நோக்கம் தமிழர் தலைநிமிர் காலம் பற்றி சிறப்பாக உரையாற்றினார் .



வரவேற்புரையை அடுத்து வளைகுடா எழுமின் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் *Mr. Alfred Berkmans,* அவர்கள் தமிழர் வரலாறு, தமிழர் வணிகம், தமிழர் நிர்வாக திறன் குறித்து உரையாற்றினார். அவர்கள் ஆற்றிய உரை இந்த விழாவில் வந்து சிறப்பித்தோர் மத்தியில் சிறப்பானதோர் தாக்கத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியது.

அதையடுத்து, கத்தார் வாழ் தமிழ் நடன இயக்குனர் *Dr. Soosadima Earoni* குழுவினரின் பரதம் வருகைப்புரிந்த அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

மற்றும் திருமதி. ரங்கமணி ரவி அவர்கள் பெண்களுக்கு சமூகத்தில் கிடைக்கப்பெற்ற நன்மைகள் மற்றும் எழுமின் அமைப்பு பெண்களுக்கு எவ்வளவு பயனாக உள்ளது என்பதை

பெண்கள் பாதுகாப்பு, தொழில் துவங்குவது,பெண்கள் தாயாக, மனைவியாக, மகளாக உறவுகளுக்கிடையே நீக்கமற நிறைந்திருப்பவர்கள் இவ்வளவுக்கும் மத்தியில் பெண்கள் வெற்றியடைவது எப்படி என அருமையான உரை மூலம் விளக்கினார்.

அவரை தொடர்ந்து , கத்தார் எழுமின் அமைப்பின் நிருவாக குழு உறுப்பினர் *(venture Capital) Mr. Karthick kadappa* ஒரு ஆண் தொழில் தொடங்குவது பற்றியும் ஒரு பெண் தொழில் தொடங்கி வெற்றியடைந்தால் சமூகம் எந்த மாதிரியான பயன் அடையும் என்பதை ஒரு சிறுகதையுடன் விளக்கினார்.

விழாவில் சேது தொழில் நுட்ப கல்லூரி நிறுவனர் *Mr. S. Mohamed Jaleel* அவர்களுக்கு பட்டமும் நினைவு பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கத்தார் வாழ் தமிழர்களை ஊக்குவிக்கும் விதமாக நான்கு சாதனையாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் சார்பாக விருது மற்றும் சிறப்பு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர் , பரிசு பெற்றவர்கள் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தனர், அவர்களைப்பற்றிய சாதனை விளக்கமாக அவர்கள் சாதித்த விடையங்களை காணொளி காட்சி மூலம் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்கள் வருமாறு *Mrs. Umadevi Arasu, Mr. Padmanaban krishnan, Mrs. Revathi Devarajan, Mr. Senthamizhselvan* ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

புதிய உறுப்பினர்கள் எழுமின் அமைப்பில் எவ்வாறு பயன்பெற முடியும் என அமைப்பின் இணை பொருளாளர் திரு. முத்துகிருஷ்னன் அவர்கள் விளக்கினார்.

வளைகுடா எழுமின் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் *Mr. Alfred Berkmans* 2023-2025 ஆம் ஆண்டு நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

விழாவின் இறுதியாக கத்தார் எழுமின் அமைப்பின் இணை இயக்குனர் *Mr. Mahadevan Durairaj* அவர்கள் சிறப்பான ஒரு நன்றியுரையுடன் வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழா நிறைவில் கத்தாரில் உள்ள தமிழ்நாடு உணவகத்தில் இருந்து தமிழ் மண் வாசணை சுவையுடன் விருந்துமளிக்கப்பட்டது.

கத்தார் நாட்டின் தமிழ் தொழில்முனைவோர் மற்றும் திறனாளர் கூட்டமைப்பான எழுமின் இயக்க நிர்வாகிகளும் உறுப்பினர்களும் மற்றும் வருகைபுரிந்த தமிழ் உறவுகள் அனைவரும் விழாவை ரசித்து மகிழ்ந்தார்கள் .

**தமிழால் இணைவோம்!**
**தமிழராய் தலைநிமிர்வோம்!**









விளையாட்டு

# மட்டு மாணவன் மதுஷிகன் பாக்குநீரிணையை நீந்திக்கடந்து சாதனை



President's Scout Thevendran Mathusigan (St.Michael's College Scout Group)









பாக்குநீரிணையினை கடந்து மட்டக்களப்பு மண்ணிற்கு பெருமைசேர்த்த T. மதுஷிகன் அவர்களை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்ட குழுவினர் தலைமன்னாரில் வரவேற்று பாராட்டினர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இச்சாதனையினை புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவில் நிகழ்த்தியிருப்பது சிறப்பம்சமாகும்.

20 வயதுடைய ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற மதுஷிகன் இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னார் வரையான 30 கிலோ மீற்றர் தூரத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை 28. 05. 2023 அதிகாலை நீந்தத் தொடங்கி பிற்பகல் 2 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க வேண்டும் என்பது நீச்சல் வீரர்கள் பலரினதும் அபிலாஷையாக இருந்து வருகின்றது. ஆனால், இதை நீந்திக் கடப்பதுஎன்பது மிகப் பெரிய சவால் ஆகும்.

ஏனெனில் இந்நீரிணை பூராவும் கடல் பாம்புகள், ஆபத்தான கடல் வாழ் உயிரினங்கள் உள்ளன. இதையும் தாண்டி மட்டக்களப்பை சேர்ந்த இந்த மாணவன் சாதித்திருப்பது பெரும் சாதனையாகும்.



# IPL கிண்ணத்தை த்ரிலாக வென்றது சென்னை சூப்பர் கிங்ஸ்

2023 ஆம் ஆண்டுக்கான IPL கிரிக்கெட் போட்டி தொடரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி அரங்கில் நடைபெற்ற IPL இறுதி போட்டியில் சென்னை சூப்பர் கிங் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதிக்கொண்டன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் நிறைவில் 04 ஆட்டமிழப்புக்கு 214 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

குஜராத் அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய சுப்மன் கில் மற்றும் சாய் சுதர்ஷன் சிறந்த துடுப்பாட்டத்தை ஆரம்பித்து சென்னை இரசிகர்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தினார்கள்.

மேலும் குஜராத் அணி சார்பில் சாய் சுதர்ஷன் 96 ஓட்டங்களை அதிகபட்சமாக அணிக்காக பெற்றுக்கொடுத்தார்.

இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு மழை குறுக்கிட்டது. இடைநிறுத்தப்பட்ட போட்டி நேற்று நள்ளிரவு 12.10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. சென்னை அணிக்கு 15 ஓவர்களுக்கு 171 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர் நிறைவில் 05 ஆட்டமிழப்புக்கு 171 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இந்த வெற்றியின் ஊடாக ஐந்தாவது முறையாக IPL கிரிக்கெட் போட்டி தொடரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வென்றுள்ளது.

இம்முறையுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஐந்தாவது முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளத.





Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Wednesday, 31. 05. 2023